குஹ்யாதி-குஹ்ய-கோப்த்ரீ த்வம்
க்ருஹாணாஸ்மத் க்ருதம் ஜபம் ।
ஸித்திர்ப் பவது மே தேவி
த்வத் ப்ரஸாதான்-மயி ஸ்திரா ॥

ஸ்த்ரீரூபம் ப்ராப்ய திவ்யா பவதி ச மஹிஷீ ஸ்வாச்ரயஸ்-யாதி கர்த்து:
ப்ரோக்தௌ தர்ம-ப்ரபேதாவபி நிகமவிதாம் தர்மவித் ப்ரஹ்ம கோடி ॥

—ரத்னத்ரயபரீக்ஷா 1-3.

'விச்வம் விஷ்ணு:', 'நிற்பதெல்லாம் நெடுமால்' என்றபடி விஷ்ணுவின் உபாஸனையும், விஷ்ணுவின் சகோதரியென்றும், 'வைஷ்ணவீ-விஷ்ணுரூபிணீ' என்றும் கூறப்படும் சக்தியின் உபாஸனையும் ஸகுணப் பிரதானமானவை. பரமசிவ உபாஸனை நிர்க்குணப்பிரதானம். மூன்றும் ஒரே பிரம்மவித்தையின் ஸமரஸமான மார்க்கங்கள் என்பது நமது காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரால் ஸாதனைகளாலும் உபதேசங்களாலும் மீண்டும் ஐயந்திரிபற விளக்கப்பட்டது. ஸ்ரீராமகிருஷ்ணர் பவதாரிணீ என்று பெயர்பெற்ற அம்பிகை, ஸ்ரீராதாகாந்தன் என்று பெயர்பெற்ற விஷ்ணு, ஸகல-நிஷ்கல வடிவான சிவலிங்கரூபத்தில் எழுந்தருளின பரமசிவன் ஆகிய மூன்று மூர்த்திகளின் வழிபாட்டைத் தக்ஷிணேசுவர ஆலயத்தில் முக்கியமாய்ச் செய்துவந்தார் என்பது அடியாரனைவரும் அறிந்த விஷயம். இம்மூன்று மூர்த்திகளல்லாமல் இதர மூர்த்திகளிலும் இதர மார்க்கங்களிலும் கூட அவர் ஸமரஸபாவனையுடன் ஆராதனையும் பஜனையும் தியானமும் அனுஷ்டித்தார் என்றும், 'என் சொந்தமான அன்னை' என்று அம்பிகையிடமே அனன்னியமான ஈடுபாடுடையவராயும், அவளுடைய பரமானுக்கிரகத்தால் அவளுடைய ஸகுணவடிவின் பெருமைகளையும், அவளுடைய மற்றொரு நிலை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யாகிய நிர்க்குணபாவத்தின் கம்பீரத்தையும் ஏனைய தேவதாருபங்களும் கூட பரப்பிரம்மரூபிணியான அவளே தான் என்பதையும் தம் அனுபவத்தில் கண்டு தம் அடியாரையும் கண்டனுபவிக்கும்படி அருளினர்.

இங்ஙனம் முமுக்ஷுக்கள் ஜீவன்முக்தி நிலையை எய்துதற்கு தேவியின் ஆராதனம் தலைசிறந்த ஸாதனம் என்பதை இக்காலத்தவர்க்கு எளிதில் விளங்கும்படி நிரூபித்த பெருமை ஸ்ரீ பரமஹம்ஸ குருதேவருடையதாகும். தேவதா ருபங்கள் அனைத்துள்ளும் அளவுகடந்த சௌந்தரியமும் அளவுகடந்த மகிமையும் அளவுகடந்த கருணையும் பொருந்தியது ஸ்ரீலலிதா மஹாத்ரிபுரஸுந்தரியின் திவ்ய ரூபம்.

இதுவே சிவ-சக்தி ஐக்கிய ஸ்வரூப ரகசியம். இந்த ஸித்தாந்தமே ஆயிர நாமங்களிலும் நம்முடைய சிற்றறிவுக்கும் எட்டும்படி எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ श्रीललिता-सहस्रनाम उत्तरभागः ॥

फलश्रुतिः

इत्येवं नाम-साहस्रं कथितं ते घटोद्भव ॥
रहस्यानां रहस्यं च ललिता-प्रीति-दायकम् ।
अनेन सदृशं स्तोत्रं न भूतं न भविष्यति ॥ १ ॥
सर्वरोग-प्रशमनं सर्वसंपत्प्रवर्धनम् ।
सर्वापमृत्यु-शमनं कालमृत्यु-निवारणम् ॥ २ ॥
सर्व-ज्वरार्ति-शमनं दीर्घायुष्य-प्रदायकम् ।
पुत्रप्रद-मपुत्राणां पुरुषार्थ-प्रदायकम् ॥ ३ ॥
प्रातः स्नात्वा विधानेन सन्ध्याकर्म समाप्य च ।
पूजागृहं ततो गत्वा चक्रराजं समर्चयेत् ॥ ५ ॥

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம உத்தரபாகః

பலச்ருதி:

இத்யேவம் நாம-ஸாஹஸ்ரம் கதிதம் தே கடோத்பவ॥
ரஹஸ்யானும் ரஹஸ்யஞ்ச லலிதா-ப்ரீதி-தாயகம்।
அனேன ஸத்ருசம் ஸ்தோத்ரம் ந பூதம் ந பவிஷ்யதி ॥ 1 ॥
ஸர்வ-ரோக-ப்ரசமனம் ஸர்வ-ஸம்பத்-ப்ரவர்த்தனம்।
ஸர்வாபம்ருத்யு-சமனம் காலம்ருத்யு-நிவாரணம் ॥ 2 ॥
ஸர்வ-ஜ்வரார்த்தி-சமனம் தீர்க்காயுஷ்ய-ப்ரதாயகம்।
புத்ர-ப்ரத-மபுத்ராணும் புருஷார்த்த-ப்ரதாயகம் ॥ 3 ॥
ப்ராதః ஸ்நாத்வா விதானேன ஸந்த்யாகர்ம ஸமாப்ய ச।
பூஜா-க்ருஹம் ததோ கத்வா சக்ரராஜம் ஸமர்ச்சயேத் ॥ 5 ॥

---

1. இத்யேவம் நாமஸாஹஸ்ரம்—(1) ஸ்ரீமாதா (2) மணிபூராந்த ருதிதா (3) ஸத்கதிப்ரதா (4) ஹ்ரீங்காரீ (5) ஷிஷிதாகாரா (6) குடான்னப்ரீத

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

विद्यां जपेत् सहस्रं वा त्रिशतं शतमेव वा ।
रहस्य-नाम-साहस्र-मिदं पश्चात् पठेन्नरः ॥ ६ ॥
नित्यं संकीर्तनाशक्तः कीर्तयेत् पुण्यवासरे ।
संक्रान्तौ विषुवे चैव स्वजन्मत्रितयेऽयने ॥ १९ ॥
नवम्यां वा चतुर्दश्यां सितायां शुक्रवासरे ।
कीर्तये-न्नाम-साहस्रं पौर्णमास्यां विशेषतः ॥ २० ॥
पौर्णमास्यां चन्द्रबिंबे ध्यात्वा श्रीललितांबिकाम् ।
पंचोपचारैः संपूज्य पठेन्नाम-सहस्रकम् ॥ २१ ॥
सर्वे रोगाः प्रणश्यन्ति दीर्घ-मायुश्च विन्दति ।
अय-मायुष्करो नाम प्रयोगः कल्पनोदितः ॥ २२ ॥

வித்யாம் ஜபேத் ஸஹஸ்ரம் வா த்ரிசதம் சதமேவ வா ।
ரஹஸ்ய-நாம-ஸாஹஸ்ர-மிதம் பச்சாத் படேந்-நர: ॥ 6 ॥
நித்யம் ஸங்கீர்த்தனசக்த: கீர்த்தயேத் புண்யவாஸரே ।
ஸங்க்ராந்தௌ விஷுவே சைவ ஸ்வஜன்ம-த்ரிதயேऽயனே ॥ 19 ॥
நவம்யாம் வா சதுர்தச்யாம் ஸிதாயாம் சுக்ரவாஸரே ।
கீர்த்தயேந்-நாம-ஸாஹஸ்ரம் பௌர்ணமாஸ்யாம் விசேஷத: ॥ 20 ॥
பௌர்ணமாஸ்யாம் சந்த்ரபிம்பே த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம் ।
பஞ்சோபசாரை: ஸம்பூஜ்ய படேந்-நாம-ஸஹஸ்ரகம் ॥ 21 ॥
ஸர்வே ரோகா: ப்ரணச்யந்தி தீர்க்க-மாயுச்ச விந்ததி ।
அய-மாயுஷ்கரோ நாம ப்ரயோக: கல்பனேதித: ॥ 22 ॥

மானஸா (7) தராந்தோலிததீர்க்காக்ஷீ (8) தேச - காலாபரிச்சின்னு (9) புஷ்டா (10) நாதரூபிணீ என்பவை சதக ஆரம்ப நாமங்கள்.

19. ஸ்வஜன்ம த்ரிதயே—'ஸ்வஸ்ய ஸ்வபார்யாயா: ஸ்வபுத்ரஸ்ய ச ஜன்மநக்ஷத்ரேஷு; 'ஸ்வஜன்மதிவஸ - தீக்ஷாதிவஸ - பூர்ணபிஷேக தினத்ரயே வா' (பா.)

20. பௌர்ணமஸ்யாம்—ஒ. 'கர்மணே யஸ்ய ய: கரலஸ்-தத்கால-வ்யாபினீ திதி:'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ज्वरार्तं शिरसि स्पृष्ट्वा पठेन्नाम-सहस्रकम् ।
तत्क्षणात् प्रशमं याति शिरस्तोदो ज्वरोऽपि च ॥ २३ ॥
सर्वव्याधि-निवृत्त्यर्थं स्पृष्ट्वा भस्म जपेदिदम् ।
तद्भस्म-धारणादेव नश्यन्ति व्याधयः क्षणात् ॥ २४ ॥
जलं संमन्त्र्य कुंभस्थं नाम-साहस्रतो मुने ।
अभिषिंचेद्ग्रह-ग्रस्तान् ग्रहा नश्यन्ति तत्क्षणात् ॥ २५ ॥
सुधासागर-मध्यस्थां ध्यात्वा श्रीललितांबिकाम् ।
यः पठेन्नाम-साहस्रं विषं तस्य विनश्यति ॥ २६ ॥
वन्ध्यानां पुत्रलाभाय नामसाहस्र-मन्त्रितम् ।
नवनीतंप्रदद्यात्तु पुत्रलाभो भवेद्ध्रुवम् ॥ २७ ॥

ஜ்வரார்த்தம் சிரஸி ஸ்ப்ருஷ்ட்வா படேந்-நாமஸஹஸ்ரகம் ।
தத்-க்ஷணாத் ப்ரசமம் யாதி சிரஸ்தோதோ ஜ்வரோऽபி ச ॥23॥
ஸர்வ-வ்யாதி-நிவ்ருத்யர்த்தம் ஸ்ப்ருஷ்ட்வா பஸ்ம ஜபே-திதம் ।
தத்-பஸ்ம-தாரணா-தேவ நச்யந்தி வ்யாதய: க்ஷணாத் ॥ 24 ॥
ஜலம் ஸம்மந்த்ர்ய கும்பஸ்தம் நாம-ஸாஹஸ்ரதோ முனே ।
அபிஷிஞ்சேத்-க்ரஹ-க்ரஸ்தான் க்ரஹா நச்யந்தி தத்க்ஷணாத் ॥ 25 ॥
ஸுதா-ஸாகர-மத்யஸ்தாம் த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம் ।
ய: படேந்-நாம-ஸாஹஸ்ரம் விஷம் தஸ்ய விநச்யதி ॥ 26 ॥
வந்த்யாநாம் புத்ரலாபாய நாம-ஸாஹஸ்ர-மந்த்ரிதம் ।
நவநீதம் ப்ரதத்யாத்து புத்ரலாபோ பவேத்-த்ருவம் ॥ 27 ॥

ஒ. 'ஸ்ரீ-மணி-ஸத்-ஹ்ரீம்-விவித-குட-தராந்-தேசைச்ச-புஷ்ட நாதாப்யாம் ||'

—பரிபாஷை.

'குணநிதி:, ஆத்மா, ரோகபர்வத-தம்போலி:, மஹாலாவண்ய சேவதி: இதி நாமானி பும்லிங்கானி । தேந குணநித்யை இத்யாதி: ப்ரயோகோ ந கார்ய: । சேஷாணி ஸ்த்ரீலிங்கானி । ததித்யாதி பஞ்ச நாமானி நபும்ஸகானி । த்வமிதி பதமபி ஸ்த்ரீலிங்கமேவ । ஸ்வதா ஸ்வாஹேத்யனயோ-ரவ்யயத்வாத் ஸ்வதா நம இத்யாதிரேவ ப்ரயோக:!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

एभि-र्नाम-सहस्रैस्तु श्रीचक्रं योऽर्चयेत् सकृत् ।
पद्मैर्वा तुलसीपुष्पैः कल्हारै-र्वा कदंबकैः ॥ ५१ ॥

चंपकै-र्जाति-कुसुमै-र्मल्लिका-करवीरकैः ।
उत्पलै-र्बिल्व-पत्रैर्वा कुन्दकेसर-पाटलैः ॥ ५२ ॥

अन्यैः सुगन्धि-कुसुमैः केतकी-माधवी-मुखैः ।
तस्य पुण्यफलं वक्तुं न शक्नोति महेश्वरः ॥ ५३ ॥

प्रति-मासं पौर्णमास्या-मेभि-र्नाम-सहस्रकैः ।
रात्रौ यश्चक्रराजस्था-मर्चयेत् परदेवताम् ॥ ५५ ॥

स एव ललितारूप-स्तद्रूपा ललिता स्वयम् ।
न तयो-र्विद्यते भेदो भेदकृत्पापकृद्भवेत् ॥ ५६ ॥

ஏபிர்-நாம-ஸஹஸ்ரைஸ்து ஶ்ரீசக்ரம் யோऽர்ச்சயேத் ஸக்ருத்।
பத்மைர்-வா துளஸீபுஷ்பை: கல்ஹாரைர்-வா கதம்பகை: ॥ 51 ॥

சம்பகைர்-ஜாதி-குஸுமைர்-மல்லிகா- கரவீரகை: ।
உத்பலைர்-பில்வபத்ரைர்-வா குந்த-கேஸர-பாடலை : ॥ 52 ॥

அன்யை: ஸுகந்திகுஸுமை: கேதகீ-மாதவீ-முகை: ।
தஸ்ய புண்யபலம் வக்தும் ந சக்னோதி மஹேச்வர: ॥ 53 ॥

ப்ரதி-மாஸம் பௌர்ணமாஸ்யா-மேபிர்-நாம-ஸஹஸ்ரகை: ।
ராத்ரௌ யச் சக்ரராஜஸ்தா-மர்ச்சயேத் பரதேவதாம் ॥ 55 ॥

ஸ ஏவ லலிதாரூபஸ்-தத்ரூபா லலிதா ஸ்வயம் ।
ந தயோர்-வித்யதே பேதோ பேதக்ருத் பாபக்ருத்-பவேத் ॥ 56 ॥

ஸ்வான் தத்தே இத்யாதி ரூபேऽர்த்தே து ஸ்வதாயை நம இத்யாதிரேவ ஸுவச இத்யுக்தம்.' (பா.)

'பும் தேவத்யா மந்த்ரா:, ஸ்த்ரீதேவத்யா வித்யா இதி மந்த்ர வித்யயோர்-லக்ஷணபேதேப்யஸ்யா: சிவசக்தி ஸாமரஸ்ய ரூபத்வா-துபயாத்மதேதி' (பா.)

56. ஸ ஏவ லலிதாரூப: ௯. 'மஹாமந்த்ர - ராஜாந்த - பீஜம் பராக்யம் ஸ்வதோ - ந்யஸ்த-பிந்து ஸ்வயம் ந்யஸ்த-ஹார்த்தம்| பவத்வக்த்ர-வக்ஷோஜ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

महानवम्यां यो भक्तः श्रीदेवीं चक्रमध्यगाम् ।
अर्चये-न्नामसाहस्रै-स्तस्य मुक्तिः करे स्थिता ॥ ५७ ॥

यस्तु नाम-सहस्रेण शुक्रवारे समर्चयेत् ।
चक्रराजे महादेवीं तस्य पुण्यफलं शृणु ॥ ५८ ॥

सर्वान् कामा-नवाप्येह सर्वसौभाग्य-संयुतः ।
पुत्र-पौत्रादि-संयुक्तो भुक्त्वा भोगान् यथेप्सितान् ॥ ५९ ॥

अन्ते श्रीललितादेव्याः सायुज्यमति-दुर्लभम् ।
प्रार्थनीयं शिवाद्यैश्च प्राप्नोत्येव न संशयः ॥ ६० ॥

निष्कामः कीर्तयेद्यस्तु नाम-साहस्र-मुत्तमम् ।
ब्रह्मज्ञान-मवाप्नोति येन मुच्येत बन्धनात् ॥ ६३ ॥

மஹாநவம்யாம் யோ பக்த: ஸ்ரீதேவீம் சக்ர-மத்யகாம் ।
அர்ச்சயேந்-நாம-ஸாஹஸ்ரைஸ்-தஸ்யமுக்தி: கரே ஸ்திதா ॥ 57 ॥

யஸ்து நாம-ஸஹஸ்ரேண சுக்ரவாரே ஸமர்ச்சயேத் ।
சக்ரராஜே மஹாதேவீம் தஸ்ய புண்ய-பலம் ச்ருணு ॥ 58 ॥

ஸர்வான் காமா-னவாப்யேஹ ஸர்வ-ஸௌபாக்யஸம்யுத: ।
புத்ர-பௌத்ராதி-ஸம்யுக்தோ புக்த்வா போகான் யதேப்-ஸிதான் ॥ 59 ॥

அந்தே ஸ்ரீலலிதாதேவ்யா: ஸாயுஜ்ய-மதிதுர்லபம் ।
ப்ரார்த்தனீயம் சிவாத்யைச் சப்ராப்னோத்யேவநஸம்சய: ॥ 60 ॥

நிஷ்காம: கீர்த்தயேத்-யஸ்து நாம-ஸாஹஸ்ர-முத்தமம் ।
ப்ரஹ்மஜ்ஞான-மவாப்னோதி யேந முச்யேத பந்தனாத் ॥ 63 ॥

குஹ்யாபிதானம் ஸ்வரூபம் ஸக்ருத்-பாவயேத் ஸ த்வமேவ ॥ !

—தேவீபுஜங்கம் (சங்.) 16.

59. ஸர்வான் காமான்—ஒ. 'கணேசம் பூஜயேத் யஸ்து விக்னஸ்-தஸ்ய ந பாததே । ஆரோக்யார்த்தேஸர்ச்சயேத் ஸூர்யம் தர்மமோக்ஷாய மாதவம் । சிவம் தர்மார்த்தமோக்ஷாய சதுர்வர்க்காய சண்டிகாம் ॥ '

—பத்மபுராணம், புஷ்கரகண்டம், ஆன்ஹிகப்ரகரணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

चतुराश्रम-निष्ठैश्च कीर्तनीय-मिदं सदा ।
स्वधर्म-समनुष्ठान-वैकल्य-परिपूर्तये ॥ ६६ ॥
कलौ पापैकबहुले धर्मानुष्ठान-वर्जिते ।
नामानुकीर्तनं मुक्त्वा नृणां नान्यत्परायणम् ॥ ६७ ॥
देवी-नाम-सहस्राणि कोटिशः सन्ति कुंभज ।
तेषु मुख्यं दशविधं नामसाहस्र-मुच्यते ॥
रहस्यनाम-साहस्र-मिदं शस्तं दशास्वपि ॥ ७० ॥
तस्माद्रहस्य-नामानि श्रीमातुः प्रयतः पठेत् ।
इति ते कथितं स्तोत्रं रहस्यं कुंभसंभव ॥ ८० ॥

சது-ராச்ரம-நிஷ்டைச்ச கீர்த்தநீய-மிதம் ஸதா ।
ஸ்வதர்ம-ஸமனுஷ்டான-வைகல்ய-பரிபூர்த்தயே ॥ 66 ॥
கலௌ பாபைக-பஹுலே தர்மானுஷ்டான-வர்ஜிதே ।
நாமானு-கீர்த்தனம்முக்த்வா ந்ருணும்நான்யத்பராயணம் ॥ 68 ॥
தேவீ-நாம-ஸஹஸ்ராணி கோடிச: ஸந்தி கும்பஜ ।
தேஷு முக்யம் தசவிதம் நாம-ஸாஹஸ்ர-முச்யதே ।
ரஹஸ்ய-நாம-ஸாஹஸ்ர-மிதம் சஸ்தம் தசஸ்வபி ॥ 70 ॥
தஸ்மாத்-ரஹஸ்ய-நாமானி ஸ்ரீமாது: ப்ரயத: படேத் ।
இதி தே கதிதம் ஸ்தோத்ரம் ரஹஸ்யம் கும்பஸம்பவ ॥ 80 ॥

---

70. **தேஷு முக்யம் தசவிதம்**—'ஏதே தச ஸ்தவா கங்-கா-ச்யா-ல-கா-பா-ல-ரா-ஸ-ப' (கங்கா, காயத்ரீ, ச்யாமளா, லக்ஷ்மீ, காளீ, பாலா, லலிதா, ராஜராஜேச்வரீ, ஸரஸ்வதீ, பவானீ).

ஆயிரம் நாமங்களின் பாகுபாடு—(ஆரம்ப அக்ஷரங்களின் வரிசைப்படி)—

अ, 40; आ, 11; इ, 3; ई, 2; उ, 5; ए, 1; ओ, 2; अं, 4; ஆக 8 உயிரெழுத்துக்களுக்கு 68 நாமங்கள்.

क, 81; ख, 1; ग, 24; च, 29; छ, 1; ज, 18; ड, 2; त, 46; द, 37; ध, 14; न, 75; प, 81; ब, 24; भ, 37; म, 112; ஆக 15 உயிர்மெய் எழுத்துக்களுக்கு 582 நாமங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

स्वतन्त्रेण मया नोक्तं तवापि कलशीभव ।
ललिता-प्रेरणादेव मयोक्तं स्तोत्र-मुत्तमम् ॥ ८४ ॥
कीर्तनीय-मिदं भक्त्या कुंभयोने निरन्तरम् ।
तेन तुष्टा महादेवी तवाभीष्टं प्रदास्यति ॥ ८५ ॥

सूत उवाच—

इत्युक्त्वा श्रीहयग्रीवो ध्यात्वा श्री ललितांबिकाम् ।
आनन्द-मग्न-हृदयः सद्यः पुलकितोऽभवत् ॥ ८६ ॥

इति श्री ब्रह्माण्डपुराणे
उत्तरखण्डे श्रीहयग्रीवागस्त्य-संवादे श्रीललिता-
सहस्रनाम-स्तोत्र- फलश्रुतिर्नाम उत्तरभागः ॥

ஸ்வதந்த்ரேண மயா நோக்தம் தவாபி கலசீபவ ।
லலிதா-ப்ரேரணாதேவ மயோக்தம் ஸ்தோத்ர-முத்தமம் ॥84॥
கீர்த்தனீய-மிதம் பக்த்யா கும்பயோனே நிரந்தரம் ।
தேந துஷ்டா மஹாதேவீ தவாபீஷ்டம் ப்ரதாஸ்யதி ॥ 85 ॥

ஸூத உவாச—

இத்யுக்த்வா ஸ்ரீஹயக்ரீவோ த்யாத்வா ஸ்ரீலலிதாம்பிகாம் ।
ஆனந்த-மக்ன-ஹ்ருதய: ஸத்ய: புலகிதோ ऽபவத் ॥ 86 ॥

இதி ஸ்ரீ ப்ரஹ்மாண்டபுராணே
உத்தரகண்டே ஸ்ரீ ஹ்யக்ரீவாகஸ்த்ய-ஸம்வாதே
ஸ்ரீ லலிதா-ஸஹஸ்ரநாம-ஸ்தோத்ர-
பலச்ருதிர்-நாம உத்தரபாக: ॥

य, 13; र, 38; ल, 14; व, 79; श, 59; ष, 5; स, 122; ह, 11; क्ष, 9; ஆக 9 எழுத்துக்களுக்கு 350 நாமங்கள், ஆகவே 1000 நாமங்களும் ஸம்ஸ்கிருத நெடுங்கணக்கிலுள்ள 51 எழுத்துக்களில் மேலே குறிப்பிட்ட 32 எழுத்துக்களில் மட்டும் தொடங்குகின்றன.

ஒ. த்வாத்ரிம்சத்-பேத பின்னா யா தாம் வந்தே஽ஹம் பராத்பராம்.
—ஸூத ஸம்ஹிதை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸ்ரீநரஸிஹ்மானந்த நாதர் பரிபாஷா சுலோகப்படி 'ஆ' வுக்கு 10ம் 'ஜ' வுக்கு 19ம் காட்டப்பட்டுள்ளன. அவ்வகையில் 828வது நாமம் ஜா என்று அமையும். பாஸ்கரராயர் முதலில் கொண்டுள்ள பாடப்படியும் தற்கால ஸம்பிரதாயத்தில் உள்ள பாடப்படியும் 828வது நாமம் ஆஜ்ஞா என்பதாகும். பாஸ்கரராயரைப் பின் பற்றியே இந்நூலில் " ஆ " வுக்கு 11ம் " ஜ " வுக்கு 18ம் கொள்ளப் பட்டுள்ளன. அநுபந்தத்தில் நாமாவளியின் அகராதியிலும் அவ்வாறே தொகுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஸஹஸ்ரநாமத்தில் 'ந ஸ்தோபோ நாபி சப்த-புனருக்தி:' என்றபடி நிரர்த்தகமான பதமோ, 'அபி' 'ச' போன்ற அசைச்சொல்லோ, கூறியது கூறலோ இல்லை. சிலவிடங்களில் ஒரே மாதிரியான பதங்கள் வருவதாய்த் தோன்றினாலும் அவை பின்வருமாறு கொள்ளப்படவேண்டும் என விளக்கப் பட்டிருக்கிறது.

சு.	நாம எண்	நாமம்	சு.	நாம எண்	நாமம்
37	94	கௌலினீ	171	925	கௌலினீ-கேவலா
43	128	ஸாத்வீ	138	711-2	ஸாது-ஈ
74	329	காந்தா	160	860	(அ) காந்தா
74	331	வரதா	127	639	(அ) வரதா
91	425-7	தத்-த்வம்-அயீ	168	907	தத்வமயீ
94	445	மதி:	110	537	(அ) மதி:
96	462	சோபனா	133	683	சோபனா-ஸுலபா-கதி:
			178	972	(ஆ) சோபனா
98	476	(ஆ) ரக்தவர்ணா	103	499	ரக்தவர்ணா
115	566	நித்யத்ருப்தா	154	815	(அ) நித்யத்ருப்தா
131	663	அஜாஜேத்ரீ	162	866	அஜா

ஒ. மதி-வரதா-காந்தாதௌ-அகாரயோகேன ரக்தவர்ணாதௌ |
ஆகாரஸ்ய க்வசன து பதயோர்-யோகேன பேதயேந் நாம ||
ஸாத்வீ தத்வமயீதி த்வேதா த்ரேதா புதோ பித்யாத் |
ஹம்ஸவதீ சானர்க்யேத்-யர்த்தாந்தா-தேக-நாமைவ ||
சக்திர்-நிஷ்டா-தாம-ஜ்யோதி: பரபூர்வகம் த்விபதம் |
சோபன-ஸுலபாஸு-கதிஸ்-த்ரிபதைகபதானி சேஷாணி ||'
இத்தம் நாம-ஸஹஸ்ரம் ஸாதக-லோகோபகாரகம் விஹிதம் |
குணகண-ஸதஸத்-பாவா-வாச்ரித்ய ப்ரஹ்மணோ ஸம்பாயா: ||
—பரிபாஷாமண்டலம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாமாவளி

ஓம்-ஐம்-ஹ்ரீம்-ஸ்ரீம்

1. ஓம் ஸ்ரீமாத்ரே நம:

2. ஓம் ஸ்ரீமஹாராஜ்ஞ்யை
3. ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வர்யை
4. சிதக்னிகுண்ட-ஸம்பூதாயை
5. தேவகார்ய-ஸமுத்யதாயை
6. உத்யத்பானு-ஸஹஸ்ராபாயை
7. சதுர்பாஹு-ஸமன்விதாயை

---

1. (உயர்வற உயர்நலமாகிய) திருவே வடிவான தாய்க்கு நமஸ்காரம். ('ஸ்ரீ' யென்றது அழியாத பேரின்பச் செல்வத்தைக் குறிக்கும்.

ஒ. 'ஸா ஹி ஸ்ரீ-ரம்ருதா ஸதாம்'—சுருதி.

ஸ்ரீமாதா—எல்லாத் துன்பங்களையுந் துடைத்து அழியாத இன்பத்தை ஊட்டுவிக்கும் பரிவுடைய பரதேவதையாகிய லோகமாதா.

ஒ. 'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச்சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே.'—திருவாசகம்.)

2. ஒப்புயர்வற்ற லோகரக்ஷகி.

3. சிறந்த சிம்மாஸனத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசுவரி. (தேவிக்கு சிங்கமே ஆஸனமும் வாகனமும்.)

இம்மூன்று நாமங்களால், ஆக்கியளித்துத் துடைக்கும் முத்தொழில் குறிக்கப்படும்.

4. அறிவாகிய அக்கினி குண்டத்திலிருந்து தோன்றிய பரப்பிரம்ம ஸ்வரூபிணீ.

(ஒ. 'அந்தர்-நிரந்தர-நிரிந்தன-மேதமானே, மோஹாந்தகார பரிபந்தினி ஸம்விதக்னௌ.')

5. (பண்டன், மஹிஷன், சும்பன், நிசும்பன், முதலிய அசுரர்களைக் கொன்று) தேவர்களுக்கு நன்மை புரிவதில் ஊக்க முடையவள்.

6. ஆயிரம் சூரியர்கள் உதித்தாற் போன்ற பிரகாசம் பொருந்தியவள். (ஒ. திவி ஸூர்ய-ஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா—கீ. 11. 12)

7. (தேவியின் வடிவம் ஐந்து—(i) ஸ்தூலம்; கை கால் முதலிய அங்கங்களுடன்; (ii) ஸூக்ஷ்மம்; மந்திரமயம் (iii) ஸூக்ஷ்மதரம்: காமகலா ரூபம் (iv) ஸூக்ஷ்மதமம்: குண்டலினீ ரூபம் (v) சுத்தப்ரஹ்ம ரூபம். இனி ஸ்தூலரூப வர்ணனை.) நான்கு கைகளை யுடையவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

8. ராகஸ்வருப-பாசாட்யாயை
9. க்ரோதாகாராங்குசோஜ்ஜ்வலாயை
10. மனேருபேக்ஷு-கோதண்டாயை
11. பஞ்சதன்மாத்ரஸாயகாயை
12. நிஜாருண-ப்ரபா-பூர-மஜ்ஜத்-ப்ரஹ்மாண்ட-மண்டலாயை
13. சம்பகாசோக-புந்நாக-ஸௌகந்திக-லஸத்-கசாயை
14. குருவிந்த-மணி-ச்ரேணீ-கநத்-கோடீர-மண்டிதாயை
15. அஷ்டமீசந்த்ர-விப்ராஜ-தலிக-ஸ்தல-சோபிதாயை
16. முகசந்த்ர-கலங்காப-ம்ருகநாபி-விசேஷகாயை
17. வதனஸ்மர-மாங்கல்ய-க்ருஹ-தோரண-சில்லிகாயை

---

8. ஆசை வடிவான (இச்சா சக்தியாகிய) பாசம் (இடது பின்கையில்) உடையவள்.
9. (தீமையைப்பொசுக்கும்) கோபமாகிய அங்குசம் (ஞானசக்தி வலது பின் கையில்) தரித்துப் பிரகாசிப்பவள்.
10. மனமாகிய கரும்பு வில் (இடது முன்கையில்) உடையவள்.
11. (சப்த-ஸ்பர்ச-ரூப-ரஸ-கந்தம் என்ற) ஐந்து தன்மாத்திரைகளாகிய பாணங்கள் (வலது முன்கையில்) உடையவள். (வில்லும் அம்பும் கிரியா சக்தியைக் குறிப்பன. 8-12 நாமங்களின் உட்கருத்தை உள்ளபடி உணர்ந்த ஞானியின் செயல் யாவுமே நியதியின் வயப் பட்ட நிலையில் பராசக்தியின் செயலாகவே விளங்கும். ஒ. த்ரிபுரா ரஹஸ்யம் அத். 21.)
12. தனது சிவந்த திருமேனியின் காந்தி வெள்ளத்தில் உலகனைத்தையும் மூழ்கச் செய்பவள்.
13. சம்பகம், அசோகம், புந்நாகம், ஸௌகந்திகம் என்ற புஷ்பங்களைக் கூந்தலில் அணிந்து விளங்குபவள். (ஒ. துநோது த்வாந்தம் ந:—ஸௌ-ல-43.)
14. பத்மராக மணிகள் வரிசையாய்ப் பதிக்கப்பெற்று ஒளி வீசும் அழகிய கிரீடத்தை அணிந்தவள். (ஒ. கதைர் மாணிக்யத்வம்—ஸௌ. ல. 42)
15. (அரைவட்ட வடிவான) அஷ்டமிச் சந்திரன்போல் விளங்கும் நெற்றியுடையவள், (ஒ. லலாடம் லாவண்ய—ஸௌ. ல. 46.)
16. சந்திரனிடம் தோன்றும் களங்கம் போன்று முகமண்டலத்தில் விளங்கும் கஸ்தூரிப் பொட்டுடையவள்.
17. மன்மதன் வசிக்கும் மங்கல வீடாகிய முகத்திற்குத் தோரணங்கள் போன்ற புருவங்களை உடையவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

18. வக்த்ர-லக்ஷ்மீ-பரீவாஹ-சலன்-மீனுப-லோசனுயை
19. நவசம்பக-புஷ்பாப-நாஸாதண்ட-விராஜிதாயை
20. தாராகாந்தி-திரஸ்காரி-நாஸாபரண-பாஸுராயை
21. கதம்ப-மஞ்ஜரீ-க்லுப்த-கர்ணபூர-மனோஹராயை
22. தாடங்க-யுகளீ-பூத-தபனோடுப-மண்டலாயை
23. பத்மராக-சிலாதர்ச-பரிபாவி-கபோல-புவே
24. நவவித்ரும-பிம்பஸ்ரீ-ந்யக்காரி-ரதனச்சதாயை
25. சுத்த-வித்யாங்குராகார-த்விஜபங்க்தி-த்வயோஜ்ஜ்வலாயை
26. கர்ப்பூரவீடிகாமோத-ஸமாகர்ஷி-திகந்தராயை
27. நிஜ ஸல்லாப-மாதுர்ய-விநிர்ப்பர்த்ஸித-கச்சப்யை
28. மந்தஸ்மித-ப்ரபாபூர-மஜ்ஜத்காமேச-மானஸாயை
29. அநாகலித-ஸாத்ருச்ய-சிபுக-ஸ்ரீ-விராஜிதாயை

---

18. முகத்தின் அழகு வெள்ளத்தில் சலிக்கும் மீன்களைப் போன்ற கண்களை உடையவள்.
19. அன்றலர்ந்த சம்பகம் போன்ற அழகிய மூக்குடையவள்.
20. நக்ஷத்திரத்தினும் மிகுந்த ஒளிவீசும் மூக்குத்தி யணிந்தவள்.
21. மனோஹரமாகக் கதம்பப் பூவைச் செவிப்பூவாக வுடையவள்.
22. சந்திர சூரியர்களைத் தோடுகளாக அணிந்தவள். (ஒ. ஸுதாமபி—ஸௌ. ல. 28.)
23. பத்மராகச்சிலைக்கண்ணாடியினும் மிகுந்த பிரகாசமான கன்னங்களை யுடையவள். (ஒ. ஸ்புரத்கண்டா—ஸௌ. ல. 59.)
24. புதிதான பவழத்தினும் கோவைப்பழத்தினும் சிறந்த காந்தி பொருந்திய உதடுகளை யுடையவள்.
25. (ஷோடசாக்ஷரீ) சுத்த வித்தையே முளைத்தாற் போன்று விளங்கும் இரு பல்வரிசைகளை யுடையவள்.
26. (ஏலம், லவங்கம், பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, கேஸரி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி முதலியவை கலந்த தாம்பூலம் கர்ப்பூரவீடிகா.) எத்திக்கிலுள்ளவரையும் நறு மணத்தால் கவரும் கர்ப்பூர வீடிகையென்ற தாம்பூலந் தரித்தவள். (ஒ. ப்ரக்ருத்யா மூகானுமபி—ஸௌ. ல. 98.)
27. (ஸரஸ்வதியின் வீணை கச்சபீ.) கச்சபியென்ற சிறந்த வீணை நாதத்தினும் இனிய மொழியாள். (ஒ. விபஞ்ச்யா—ஸௌ. ல. 66-)!
28. காமேசுவரனுடைய மனது மூழ்கி விளையாடும் பிரவாகம் போன்ற புன்சிரிப்பினள்.
29. உவமையற்ற அழகு வாய்ந்த முகவாய்க் கட்டின் அழகுடன் விளங்குபவள். (ஒ, கராக்ரேணஸ்ப்ருஷ்டம்—ஸௌ. ல. 67.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

30. காமேச-பத்த-மாங்கல்ய-ஸூத்ர-சோபித-கந்தராயை
31. கநகாங்கத-கேயூர-கமனீய புஜான்விதாயை
32. ரத்ன-க்ரைவேய-சிந்தாக-லோல-முக்தா-பலான்விதாயை
33. காமேச்வர-ப்ரேமரத்ன-மணிப்ரதிபண-ஸ்தன்யை
34. நாப்யாலவால-ரோமாலி-லதாபல-குசத்வய்யை
35. லக்ஷ்ய-ரோம-லதாதாரதா-ஸமுன்னேய-மத்யமாயை
36. ஸ்தன-பார-தலன்-மத்ய-பட்ட-பந்த-வலித்ரயாயை
37. அருணாருண-கௌஸும்ப-வஸ்த்ர-பாஸ்வத்-கடீதட்யை
38. ரத்ன-கிங்கிணிகா-ரம்ய-ரசனா-தாம-பூஷிதாயை
39. காமேச-ஜ்ஞாத-ஸௌபாக்ய-மார்த்தவோரு-த்வயான்விதாயை
40. மாணிக்ய-முகுடாகார-ஜானுத்வய-விராஜிதாயை

---

30 காமேசுவரர் கட்டிய மங்கல நாணுடன் பிரகாசிக்கும் கழுத்தினள். (ஒ. களே ரேகா: —ஸௌ. ல, 69)

31. பொன்னாலாகிய தோள்வளைகளை யணிந்தவள்.

32. அசைகின்ற முத்துக்களுடன் கூடிய ரத்தினப் பதக்கம் பொருந்திய அட்டிகை அணிந்தவள்.

33. இரத்தின கலசம் போன்ற தனது ஸ்தனங்களையே கொடுத்துக் காமேசருடைய பிரேமையை விலைக்கு வாங்கியவள்.

34. நாபி எனும் பாத்தியிலிருந்து முளைத்தெழுந்த கொடிபோன்ற மெல்லிய உரோம வரிசையின் உச்சியில் பழுத்த பழங்களை யொத்த இரு ஸ்தனங்களை யுடையவள். (ஒ. ஹரக்ரோதஜ்வாலா— ஸௌ. ல. 76.)

35. உரோம வரிசையாகிற கொடி காணப்படுவதால் அதற்கு ஆதார மாக ஒரு இடம் இருக்கவேண்டும் என்று ஊகிக்கும்படி (காணப் படாமல்) இருக்கும் இடை யுடையவள்.

36. ஸ்தன பாரத்தினால் இடைக்கு ஊனமேற்படாது காப்பதற்காக அணியப் பெற்ற முப்பட்டையோ என விளங்கும் மூன்று மடிப்புக் களை வயிற்றில் உடையவள். (ஒ. நிஸர்க்க க்ஷீணஸ்ய—ஸௌ. ல. 79.)

37. சிவப்புப் பட்டாடையால் பிரகாசிக்கின்ற இடை யுடையவள்.

38. இரத்தினச் சதங்கைகளுடன் விளங்கும் அழகிய அரைஞாண் பூண்டவள்.

39. அழகும் மென்மையும் காமேசனால் மட்டும் அறியப்பெற்ற துடைகளை யுடையவள்.

40. மாணிக்க முகுடம் போன்ற முழந்தாள் சில்லுகளை யுடையவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

41. இந்த்ரகோப-பரிக்ஷிப்த-ஸ்மரதூணப-ஜங்கிகாயை!
42. கூட-குல்பாயை
43. கூர்ம-ப்ருஷ்ட-ஜயிஷ்ணு-ப்ரபதான்விதாயை
44. நகதீதிதி-ஸஞ்சன்ன-நமஜ்ஜன-தமோகுணயை
45. பத-த்வய-ப்ரபா-ஜால-பராக்ருத-ஸரோருஹாயை
46. ஸிஞ்ஜான-மணி-மஞ்ஜீர-மண்டித-ஸ்ரீபதாம்புஜாயை
47. மராலீ-மந்த-கமனயை
48. மஹா-லாவண்ய-சேவதயே
49. ஸர்வாருணயை
50. அநவத்யாங்க்யை
51. ஸர்வாபரண-பூஷிதாயை
52. சிவ-காமேச்வராங்கஸ்தாயை
53. சிவாயை
54. ஸ்வாதீன-வல்லபாயை

---

41. இந்திரகோபங்கள் என்ற கார்காலத்துப் பூச்சிகள் மொய்க்கப் பெற்ற மதனவேளின் அம்பராத் தூணிகளோ எனத் தோன்று பவையான பசலை படர்ந்த முன்னங்கால்களைக் கொண்டவள். (ஒ. பராஜேதும்ருத்ரம்—ஸௌ. ல. 83.)
42. உருண்டு அழகிய கணைக் கால்களை யுடையவள்.
43. ஆமையின் முதுகுபோல் வளைந்த புறங்கால் உள்ளவள்.
44. தன் பாதங்களில் வணங்குவோர் அகத்திலுள்ள இருளை நகத்தின் காந்தியால் போக்குபவள்.
45. தாமரையினும் மிக்க அழகுவாய்ந்த பாதங்களை யுடையவள்.
46. ஒலிக்கும் இரத்தினப் பரல்கள் கொண்ட சிலம்புகளால் விளக்க முறும் அழகிய பாதங்களை யுடையவள்.
47. ஹம்ஸம் போன்ற மெதுவான நடை யுடையவள்.
48. பேரழகின் பொக்கிஷமானவள். (ஒ. த்வதீயம் ஸௌந்தர்யம்— ஸௌ. ல. 12.)
49. (ஆடை, ஆபரணம், உருவம்) எல்லாவற்றிலும் சிகப்பு வர்ண மானவள். (ஒ. அராலா கேசேஷு—ஸௌ. ல. 93.)
50. குறைவற்ற அழகு வாய்ந்த அங்கங்களையுடையவள்.
51. ஸர்வாபரணபூஷிதை. (இதுவரை தேவியின் அவதாரமும் கேசம் முதல் பாதம் வரை ஸ்தூலரூபவர்ணனையும்).
52. (உலகைப் படைக்க இச்சைகொண்ட சிவன் காமேசுவரன்.) காமேசுவரனான சிவனுடைய துடைமேல் அமர்ந்தவள்.
53. சிவவடிவானவள். ஒ. 'யதா சிவஸ்-ததா தேவீ யதா தேவீ ததா சிவ: | தஸ்மா-தபேத-புத்த்யைவ சிவேதி கதயந்த்-யுமாம்' || (லிங்கபுராணம்)
54. தன்வயப்பட்ட பர்த்தாவையுடைவள். (ஒ. சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்.—ஸௌ. லஹரீ.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

55. ஸுமேரு-மத்ய-ச்ருங்கஸ்தாயை
56. ஸ்ரீமந்நகர-நாயிகாயை
57. சிந்தாமணிக்ருஹாந்தஸ்தாயை
58. பஞ்ச-ப்ரஹ்மாஸன-ஸ்திதாயை
59. மஹாபத்மாடவீ-ஸம்ஸ்தாயை
60. கதம்பவந-வாஸின்யை
61. ஸுதா-ஸாகர-மத்யஸ்தாயை
62. காமாக்ஷ்யை

---

55. (மேருமலையின் மூன்று சிகரங்களில் மும்மூர்த்திகள் வசிக்கின்றனர்.) மேருவின் நடுவிலுள்ள (நாலாவது) சிகரத்தில் இருப்பவள்.

56. ஸ்ரீநகரத்தின் நாயகி. (ஒ. யோ வை தாம் ப்ரஹ்மணோ வேத அம்ருதேநாவ்ருதாம் புரீம். —ஆருணம் 115.)

57. சிந்தாமணி கிருகத்திலிருப்பவள் ('ஸர்வேஷாம் சிந்தித அர்த்த-ப்ரத மந்த்ராணும் நிர்மாணஸ்தானம்.' சிந்தித்த பொருளை எல்லோருக்கும் அருளும் மந்திரங்களின் உறைவிடம்)

58. (பிரம்மா - விஷ்ணு - ருத்ரன்-ஈசானன் - ஸதாசிவன் என்ற) பஞ்சப் பிரம்மத்தை ஆஸனமாக உடையவள். (ஒ. கதாஸ்தே மஞ்சத்வம்—ஸௌ. ல. 92.)

59. தாமரைக்காட்டில் உறைபவள். (அல்லது மஹாபத்மம் சிறந்த ஜாதி யானை அத்தகைய யானைகள் செறிந்த (அடவீ) காடு, திருவானைக்கா, அங்கு உறைபவள்; அகிலாண்டேசுவரீ, தண்டினீ என்ற மஹா வாராஹியின் ஸ்வரூபம்)

60. கதம்பவனத்தில் வசிப்பவள். (சிந்தாமணிக்கிருகத்தைச் சுற்றி மணிமண்டபம்; அதைச் சுற்றிக் கதம்பவனம். கதம்பவனம் என்று மதுரைக்கும் பெயர். அங்கு மீனுக்ஷியாக உறைபவள்—மந்த்ரிணீ என்ற மஹா சியாமளா.)

61. அமிருதக்கடலின் நடுவிலுள்ளவள். (ஒ. 'ஸுதா ஸிந்தோர் மத்யே'—ஸௌ லஹரீ 8. ஸுதாஸாகரம் என்று காஞ்சிக்கும் பெயர். அங்கு ஏகாம்பரநாதரும் வரதராஜரும் தன்னைச் சுற்றி பவனிவரும் வகையில் காமாக்ஷியாய் உறைபவள்)

62. கடாக்ஷத்தால் காமங்களைப் பூர்த்திசெய்பவள். (பராஹந்தா ரூபிணியான தண்டினியும், புத்திரூபிணியான மந்த்ரிணியும் ஆத்மஸ்வரூபிணியான மஹாத்ரிபுரஸுந்தரியும் இந்நாமங்களால் குறிக்கப்படுகின்றனர்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

63. காமதாயின்யை
64 தேவர்ஷி-கண-ஸங்காத-ஸ்தூயமானாத்ம-வைபவாயை
65. பண்டாஸுர-வதோத்யுக்த-சக்தி-ஸேனா-ஸமன்விதாயை
66. ஸம்பத்கரீ-ஸமாரூட-ஸிந்துர-வ்ரஜ-ஸேவிதாயை
67. அச்வாரூடாதிஷ்டிதாச்வ-கோடி-கோடிபி-ராவ்ருதாயை
68. சக்ரராஜ-ரதாரூட-ஸர்வாயுத-பரிஷ்க்ருதாயை
69. கேயசக்ர-ரதாரூட-மந்த்ரிணீ-பரிஸேவிதாயை
70. கிரிசக்ர-ரதாரூட-தண்டநாதா-புரஸ்க்ருதாயை
71. ஜ்வாலாமாலினிகாக்ஷிப்த-வஹ்நிப்ராகார-மத்யகாயை
72. பண்டஸைன்ய-வதோத்யுக்த-சக்திவிக்ரம-ஹர்ஷிதாயை

---

63. விரும்பியதைத் தருபவள். (ஒ. த்வதன்ய:—ஸௌ, ல. 4.)
64, (இதுவரை ஸ்ரீநகரவர்ணனை. இனி பண்டாசுரவதம் கூறப்படும்.) தேவரிஷிகணங்களால் துதிக்கப்படும் ஆத்மவைபவம் உடையவள்.
65. பண்டாசுர வதத்திற்கு ஆயத்த மாயிருக்கும் சக்திஸேனையால் சூழப்பெற்றவள்.
66. (அங்குசத்திலிருந்து தோன்றிய) 'ஸம்பத்கரீ' சக்தியின் யானைப் படையால் சூழப்பெற்றவள். (யானைப்படை சப்தாதி விஷயக் கூட்டம்).
67, (பாசத்திலிருந்து தோன்றிய) 'அச்வாரூடா' சக்தியின் குதிரைப் படையால் சூழப்பெற்றவள். (குதிரைப்படை இந்திரியங்கள். ஒ. 'இந்த்ரியாணி ஹயாநாஹு:—கட. உப. 3.4.)
68. (ஒன்பது தட்டுள்ள) ஸ்ரீசக்ரமாகிய தேரின்மேல் எல்லா ஆயுதங்களும் புடைசூழ விளங்குபவள். (ஆத்மஞான ஸாதனங் களே ஆயுதங்கள்).
69. (கரும்பு வில்லினின்று தோன்றிய) கேயசக்ர மெனும் (ஏழுதட்டுத்) தேரில் வீற்றிருக்கும் (ஸங்கீத தேவதையான) மந்த்ரிணீ சக்தியால் சேவிக்கப்பட்டவள்.
70. (பஞ்சபாணத்திலிருந்து தோன்றிய) கிரிசக்ரமெனும் (ஐந்து தட்டுத்) தேரில் வீற்றிருக்கும் 'தண்டநாதா' அல்லது 'வாராஹி'யால் வழி காட்டப்பட்டவள்.
71. (திதி தேவதைகளில் பதினன்காமவளான) ஜ்வாலாமாலினீ சக்தி யால் அமைக்கப்பட்ட அக்கினிக் கோட்டை நடுவிலிருப்பவள்,
72. பண்டாசுரனது சேனைகளை அழிப்பதில் பராக்கிரமம் காட்டிய சக்தி களிடம் ஸந்தோஷித்தவள். (பண்டாசுரன் அகங்காரம் மிகுந்த ஜீவன்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

73. நித்யா-பராக்ரமாடோப-நிரீக்ஷண-ஸமுத்ஸுகாயை
74. பண்டபுத்ர-வதோத்யுக்த-பாலா-விக்ரம-நந்திதாயை
75. மந்த்ரிண்யம்பா-விரசித-விஷங்கவத-தோஷிதாயை
76. விசுக்ர-ப்ராணஹரண-வாராஹீ-வீர்ய நந்திதாயை
77. காமேச்வர-முகாலோக-கல்பித-ஸ்ரீகணேச்வராயை
78. மஹாகணேச-நிர்ப்பின்ன-விக்னயந்த்ர-ப்ரஹர்ஷிதாயை
79. பண்டாஸுரேந்த்ர-நிர்முக்த-சஸ்த்ர-ப்ரத்யஸ்த்ர-வர்ஷிண்யை
80. கராங்குலி-நகோத்பன்ன நாராயண-தசாக்ருத்யை
81. மஹா-பாசுபதாஸ்த்ராக்னி-நிர்தக்தாஸுர-ஸைனிகாயை

---

73. நித்யா தேவதைகளின் பராக்கிரமத்தைப் பார்ப்பதில் உத்ஸாகமுள்ளவள். (அனுதி ஸித்தமான ஆத்மசக்திகளே நித்யா தேவதைகள்).

74. (தனது குழந்தையான) பாலாதேவி பண்டபுத்திரர்களை அழிப்பதில் காட்டிய பாராக்கிரமத்தைக் கண்டு மகிழ்ந்தவள். (பண்டபுத்திரர்கள் ஆணவம் முதலிய மலங்கள்.)

75. மந்த்ரிணீதேவி முடித்த விஷங்கவதத்தால் ஸந்தோஷமடைந்தவள். (விஷய ஆசையே விஷங்கன். ஓ. 'விருத்த: ஸங்கோ விஷங்க:')

76. விசுக்ரனைக் கொன்ற வாராஹியின் வீரியத்தை மெச்சுபவள். (பண்டாசுரனுடைய சகோதரர்கள் விஷங்கனும் விசுக்ரனும். விசுக்ரன் மக்களையெல்லாம் அறிவாகிய வீரியத்தை இழக்கச் செய்யும் அஜ்ஞான வடிவினன்.)

77. காமேசுவரனது முக தரிசனத்தால் கணேசனைப் பெற்றவள்.

78. (விசுக்ரன் நாட்டிய) விக்ன யந்திரத்தைப் பொடியாக்கிய கணேசரைக் கண்டு மகிழ்ந்தவள்.

79. பண்டாசுரன் விட்ட பாணங்களுக்குப் பிரதியான பாணங்களைப் பொழிந்தவள்.

80. கைவிரல் நக நுனிகளால் நாராயணனது தசாவதாரங்களைத் தோற்றுவித்தவள். (பண்டன் ஸர்வாஸுர அஸ்திரம் விட்டபோது ஹிரண்யன், ராவணன், சிசுபாலன் முதலிய அசுர வடிவங்கள் தோன்றின. அவற்றை வராஹம் முதலிய விஷ்ணு மூர்த்திகளைத் தோற்றுவித்து அழித்தாள் தேவி.)

81. மஹா பாசுபத அஸ்திரத்தின் தீயால் அசுரப் படைகளைப் பொசுக்கியவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

82. காமேச்வராஸ்த்ர-நிர்தக்த-ஸபண்டாஸுர-சூன்யகாயை
83. ப்ரஹ்மோபேந்த்ர-மஹேந்த்ராதி-தேவஸம்ஸ்துத-வைபவாயை
84. ஹரநேத்ராக்னி-ஸந்தக்த-காமஸஞ்ஜீவ-னௌஷத்யை
85. ஸ்ரீமத்வாக்பவ-கூடைக-ஸ்வரூப-முக-பங்கஜாயை
86. கண்டாத:-கடிபர்யந்த-மத்ய-கூட-ஸ்வரூபிண்யை
87. சக்தி-கூடைகதாபன்ன-கட்யதோபாக-தாரிண்யை
88. மூலமந்த்ராத்மிகாயை
89. மூலகூடத்ரய-கலேபராயை

---

82. காமேசுவராஸ்திரத்தால் பண்டாசுரனையும் சூன்யகம் எனும் அவன் நகரத்தையும் எரித்தவள். (காமேசுவர அஸ்திரம் சிதக்கினி).
83. பிரம்மா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களால் துதிக்கப் பட்டவள்.
84. சிவனது நெற்றிக்கண் தீயால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப் பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து. (விஷயகாமம் எரிந்தபின் தான் ஆத்மகாமம் பிறக்கும்.)
85. (இனி தேவியின் ஸூக்ஷ்மமான மந்திர ரூபம் வர்ணிக்கப்படும்). ஸ்ரீமத் வாக்பவ கூடமே தேவியின் திருமுகத் தாமரை. (பஞ்ச தசாக்ஷரீ மந்திரத்தில் மூன்று பாகம்; முதல் ஐந்து அக்ஷரங்கள் சேர்ந்து வாக்பவகூடம், ஞானசக்தி; நடுவிலுள்ள ஆறு அக்ஷரங் கள் மத்ய கூடம் அல்லது காமராஜகூடம், இச்சாசக்தி; இறுதி யிலுள்ள நாலு அக்ஷரங்கள் சக்தி கூடம், க்ரியாசக்தி).
86. மத்திய கூடமே கழுத்திற்குக் கீழ் இடுப்பு வரை உள்ள வடிவம்
87. சக்தி கூடமே இடுப்பிற்குக் கீழுள்ள பாகமாகியவள்.
88. மூல மந்திரத்தின் உட்பொருளே தானாகி நிற்பவள் (காரணம்),
89. மூல மந்திரத்தின் முக்கூடங்களின் பொருளே தனது காரண வடிவின் மூன்று கூறுகளாக உடையவள். ஊர்த்வ பிந்து ஒன்று; அதன்கீழ் இரட்டை பிந்து; அதற்குங் கீழ் ஒரு பிந்து; இவை ஈசுவர, ஜகத், ஜீவர்களை முறையே குறிப்பன. மூன்றிற்கும் அதிஷ்டானம் சுத்த சைதன்யம். இம்மூன்றுமே மந்திரத்தின் முக்கூடங்களாயும் ஸ்தூல ரூபத்தின் அவயவங்களாயும் பரிண மித்தன என்பதும் காமகலா ரஹஸ்யம். இங்ஙனம் பரவெளியிலே கூறப்பட்ட 'பிரம்மாண்ட தத்துவம்' இனிப் 'பிண்டாண்டத்தில்' ஒவ்வொரு ஜீவனுடைய (பிண்டமாகிய) உடலிலும் காணக்கிடப் பது விளக்கப்படும்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

90. குலாம்ருதைக-ரஸிகாயை
91. குலஸங்கேத-பாலின்யை
92. குலாங்கனுயை
93. குலாந்தஸ்தாயை
94. கௌலின்யை
95. குலயோகின்யை
96. அகுலாயை

---

90. (குண்டலினீ வர்ணனை.) குலாமிருதத்தில் இரமிப்பவள். (பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படுவது என்ற த்ரிபுடி குலம்; இது உள்ள நிலையிலுள்ள ஆனந்தம் குலாம்ருதம். குலம் பிருதிவீ தத்துவம் லயிக்குமிடமாகிய ஆதார சக்ரமும், அதனுடைய ஸம்பந்தம் பெற்ற ஸுஷும்ன மார்க்கமும். ஸஹஸ்ராரத்திலிருந்து பெருகும் அம்ருதமும் குலாம்ருதம். அதைப் பருகுவதில் தனி இன்பத்தைப் பெறுபவள்.)

91. குல ஸம்பந்தமான ரகசியங்களைக் காப்பவள். (குண்டலினீ யோகரகசியம், வேதரகசியம், பூஜா ரகசியம், சக்ர ரகசியம், மந்திர ரகசியம் முதலியவைகளைத் தீயோர் கண்படாமல் காப்பவள்.)

92. குலஸ்திரீ போன்றவள். (மற்றவித்தைகள் பகிரங்கமாய்ப் பலரிடம் பழகுபவர்களைப் போன்றவை; பரதேவதையின் வடிவான ஸ்ரீ வித்தையோ தன் குலத்தைச் சேர்ந்தவருடன் மட்டுமே பழகும் குலஸ்திரீ போன்றது என்று குலார்ணவ தந்திரம் கூறுகிறது.) ஸஹஸ்ராரத்திலுள்ள பரமசிவத்தை மட்டுமே நோக்கிச் செல்லும் மஹா பதிவிரதை. (ஒ. ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே—ஸௌ. லஹரீ 9.)

93. குலம் என்னும் த்ரிபுடியினுள் (ஜ்ஞேயம்) அறியத்தக்கதாக இருப்பவள், (ஒவ்வொரு போதத்திலும் மறைந்திருப்பவள். ஒ. ப்ரதி போதவிதிதம் (கேன. உப. 2.4.) ஒவ்வொரு இடத்தினுள்ளும் பூஜிக்கத் தகுந்தவள். ஒ. 'பூஜனீயா ஜனைர்-தேவீ ஸ்தானே ஸ்தானே புரே புரே| க்ருஹே க்ருஹே சக்தி-பரைர்-க்ராமே க்ராமே வனே வனே'—பவிஷ்யத் புராணம். அத: ஸஹஸ்ராரம் குலம்; அதன் கர்ணிகையிலிருக்கும் குலதேவீ.)

94. கௌலினீ வடிவினள். (குலம் என்றால் சக்தி; அகுலம் என்றால் சிவன், இரண்டும் சேர்ந்த வடிவம் கௌலினீ.)

95. குலத்துடன் ஸம்பந்தமுடையவள். (உடலிலுள்ள ஷட்சக்ரமும் குலம்.)

96. குலத்துக்கப்பாலிருப்பவள், (ஷட் சக்ரங்களுக்கு மேலுள்ளது அகுல ஸஹஸ்ராரம், அதில் இருப்பவள். 'அதச்—சோர்த்வம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

97. ஸமயாந்தஸ்தாயை
98. ஸமயாசார-தத்பராயை
99. மூலாதாரைக-நிலயாயை
100. ப்ரஹ்மக்ரந்தி-விபேதின்யை
101. மணிபூராந்த-ருதிதாயை
102. விஷ்ணுக்ரந்தி-விபேதின்யை

ஸுஷும்னுயாம் ஸஹஸ்ர-தள-ஸம்யுதம்', கீழுள்ளது குல ஸஹஸ்ராரம் எனப்படும்.)

97. (இருதயாகாசத்தில் சிவனையும் சக்தியையும் ஸமரஸமாக உபாசிப்பது 'ஸமய' மதம் எனப்படும். இம்மதத்தில் புறப்பூஜை இல்லை). ஸமயத்தினுள் விளங்குபவள். (அதிஷ்டானம், அனுஷ்டானம், அவஸ்தானம், நாமம், ரூபம் இவைகளில் சிவ சக்திகளுக்கு ஸாம்யம் ஐந்து வகை.)

98. (மூலாதாரத்திலிருந்து படிப்படியாக தேவியை ஆறு ஆதாரங்களிலும் மானஸிக பூஜை செய்வது ஸமயாசாரம்). ஸமயாசாரத்தில் பிரியமுள்ளவள்.

99. மூலாதாரத்தில் முக்கியமாய் உறைபவள். (மூலாதாரத்தின் வடிவம் நாலிதழ்க்கமலம். அதின் நடுவில் குல குண்டம் எனுமிடத்தை வாயால் கௌவிக்கொண்டு ஸாதாரணமாய்க் குண்டலினீ சக்தி உறங்குகிருள்.)

100. (மூலாதாரமும் ஸ்வாதிஷ்டானமும் ப்ருதிவி அப்புமயம், அக்னி கண்டம், பிரம்ம கிரந்தி; மணிபூரகமும் அநாஹதமும் தேஜஸ் வாயுமயம், சூரியகண்டம், விஷ்ணுகிரந்தி; விசுத்தியும் ஆஜ்ஞையும், ஆகாச மனோமயம், ஸோமகண்டம், ருத்திர கிரந்தி; அக்கினி கண்டத்தைக் கடப்பதில் பிரம்மக்கிரந்தியின் பிளவும், சூரிய கண்டத்தில் விஷ்ணுக்கிரந்தியின் பிளவும், ஸோம கண்டத்தில் ருத்திரக்கிரந்தியின் பிளவும் ஏற்படுகின்றன. கிரந்தி என்பது நாடிகளின் முடிச்சையும் நாடியினுள் பாயும் எண்ணங்களில் பூர்வ வாஸனையால் ஏற்படும் சிக்கல்களையும் குறிக்கும்.) பிரம்மமுடிச்சைப் பிளப்பவள் (சிருஷ்டி வாஸனையைக் கடத்துவிப்பவள்; பிரம்ம ஸ்வரூபியாக தேவி விளங்கும் ஸ்தானம் ஸ்வாதிஷ்டானம்).

101. மணிபூரக சக்ரத்தில் (ஸர்வாபரண பூஷிதையாகக்) காட்சியளிப்பவள். (ஒ. 'தடித்வந்தம் சக்த்யா' ஸௌ. லஹரீ, 40.)

102, விஷ்ணு முடிச்சைப்பிளப்பவள் (ஸ்திதி வாஸனையைக் கடத்துவிப்பவள். விஷ்ணுமூர்த்தியாக தேவி விளங்கும் ஸ்தானம் மணிபூரகம்).

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

103. ஆஜ்ஞாசக்ராந்தராலஸ்தாயை
104. ருத்ரக்ரந்தி-விபேதின்யை
105. ஸஹஸ்ராராம்புஜாரூடாயை
106. ஸுதாஸாராபி-வர்ஷிண்யை
107. தடில்லதா-ஸமருச்யை
108. ஷட்சக்ரோபரி-ஸம்ஸ்திதாயை
109. மஹாஸக்த்யை
110. குண்டலின்யை
111. பிஸதந்து-தநீயஸ்யை

---

103. புருவமத்தியில் ஆஜ்ஞாசக்ரத்தின் நடுவிலுள்ளவள். (ஒ. த்வாஜ்ஞா—சக்ரஸ்தம்—ஸௌ.லஹரீ. 36.)

104. ருத்திரக்கிரந்தியைப் பிளப்பவள். (ஸம்ஹார வாஸனையைக் கடத்துவிப்பவள். ருத்ர மூர்த்தியாக, குருமூர்த்தியாக, தேவி விளங்கும் ஸ்தானம் ஆஜ்ஞாசக்கிரம். ருத்திரக் கிரந்தியையுங் கடந்தபின் பரசிவத்துடன் இரண்டறக்கலக்கும் உத்தம பதமான ஸஹஸ்ராரம் உளது. ஜீவன் இங்ஙனம் படிப்படியாக ஏறுவது ஆரோஹக்கிரமம். ஸஹஸ்ராரத்திலிருந்து. படிப்படியாக இறங்கி வருவது அவரோகணக்கிரமம்.)

105. ஸஹஸ்ரார சக்கரத்தில் ஏறியிருப்பவள்.

106. 'ஸுதா' எனும் அமிருதத்தை (ஸஹஸ்ராரத்திலிருந்து எல்லா நாடிகளிலும்) பெருகும்படி செய்பவள். (ஒ. 'அம்ருதஸ்ய-தாரா பஹுதா தோஹமானம் சரணம் நோ லோகே ஸுதிதான் ததாது'.)

107. மின்னல் கொடிபோல் பிரகாசிப்பவள், (ஒ. வித்யுல்லேகேவ பாஸ்வரா—நாராயண ஸூக்தம்.)

108. ஆறு சக்கரங்களுக்கும் மேலிருப்பவள்.

109. (பக்தர்கள் செய்யும் ஆராதனையில்) மிகுந்த பிரியமுள்ளவள். (ஆராதனை, பாஹ்ய பூஜை, மானஸ பூஜை என இருவகை. ஒ. 'மஹீம் மூலாதாரே'—ஸௌ. லஹரீ 9.)

110. குண்டலனீ ரூபமாக உள்ளவள். (மூலாதாரத்தில் மூன்றரைச் சுற்றுக் குண்டலமிட்டுப் பாம்புபோல் மூச்சு விட்டுக் கொண்டிருப்பவள். இந்த மூச்சுத்தான் ஜீவசக்தியான பிராணன். இதை எழுப்பத்தான் சித்தர்கள் 'ஆடு பாம்பே' எனப் பாடுகின்றனர். ஒ. 'உத்திஷ்டத மா ஸ்வப்த'—ஆருணம் 115.)

111. தாமரை நூல் போல் மெல்லியவள். (ஒ. 'நீவார சூகவத் தன்வீ,' நாராயண ஸூக்தம். 90 முதல் இதுவரை குண்டலினி வர்ணனை. மூலாதாரத்தில் குண்டலினிக்குக் குமாரி எனவும், அனுஹதத்திற்கு மேல் தருணீ எனவும், ஸஹஸ்ராரத்தில் ஸதாசிவ பதிவிரதை எனவும் பெயர்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

112. பவான்யை
113. பாவனுகம்யாயை
114. பவாரண்ய-குடாரிகாயை
115. பத்ரப்ரியாயை
116. பத்ரமூர்த்யை
117. பக்த-ஸௌபாக்ய-தாயின்யை
118. பக்தி-ப்ரியாயை
119. பக்தி-கம்யாயை
120. பக்தி-வச்யாயை
121. பயாபஹாயை
122. சாம்பவ்யை

---

112. (இனி பக்தானுக்ரஹவர்ணனே.) 'பவன்' என்ற பரமசிவனுடைய பத்னி. ('பவ:' என்பது ஸம்ஸாரஸாகரம். அதற்குப் பிராணனைக் கொடுப்பவள். ஒ.—பவனுத் பாவனுச்சைவ பூதானும் ஸ பவ: ஸ்ம்ருத: ஒ. 'பவானி த்வம் தாஸே'—ஸௌ. லஹரீ 22.)

113. பாவனையால் அடையத்தக்கவள். (ஒ. 'ஜ்ஞானமர்க்யம் ஜ்ஞேயம் ஹவிர் ஜ்ஞாதா ஹோதா, ஜ்ஞாத்ரு-ஜ்ஞான-ஜ்ஞேயானு-மபேத பாவனம் ஸ்ரீசக்ரபூஜனம்'—பாவனோபநிஷத். 10.)

114. ஸம்ஸாரமாகிய காட்டையழிக்கும் கோடரி போன்றவள்.

115. (பக்தர்களுக்கு) மங்களத்தைச் செய்வதில் பிரியமுள்ளவள்.

116. மங்களமே வடிவானவள். (ஒ. 'மங்கலானுஞ்ச மங்கலம்.)

117. பக்தர்களுக்கு ஸௌபாக்கியத்தை அளிப்பவள். (பக: ஸ்ரீ-காம-மாஹாத்ம்ய-வீர்ய-யத்ன-அர்க்க-கீர்த்திஷு.)

118. பக்தியில் பிரியமுள்ளவள். (ஒ. ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்। அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம் ‖ (பாகவதம்) ஒ. அங்கோலம் நிஜபீஜ-ஸ்ந்ததி:—சிவானந்தலஹரீ 61.)

119. பக்தியால் அடையத்தக்கவள். (ஒ. பக்த்யா த்வனன்யயா லப்ய:—கீ. 11.54.)

120. பக்திக்குக் கட்டுப்பட்டவள்.

121. பயத்தைப் போக்குபவள். (ஒ. ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதச்சன. தை. உப. 2.9.)

122. சம்புவின் பத்னி. (நவ கன்னிகைகளில் எட்டு வயதுள்ளவள் சாம்பவீ. அல்லது யோகிகள் கூறும் சாம்பவீ முத்திரையாக இருப்பவள். ஒ. அந்தர்-லக்ஷ்யம் பஹிர்-த்ருஷ்டிர்-நிமேஷோன்மேஷ-வர்ஜிதா ! ஏஷா ஸா சாம்பவீ முத்ரா ஸர்வ தந்த்ரேஷு கோபிதா ‖ சாம்பவர்களுக்குத்தாய்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

123. சாரதாராத்யாயை
124. சர்வாண்யை
125. சர்மதாயின்யை
126. சாங்கர்யை
127. ஸ்ரீகர்யை
128. ஸாத்வ்யை
129. சரச்சந்த்ர-நிபானனாயை
130. சாதோதர்யை
131. சாந்திமத்யை
132. நிராதாராயை
133. நிரஞ்ஜனாயை
134. நிர்லேபாயை
135. நிர்மலாயை
136. நித்யாயை
137. நிராகாராயை
138. நிராகுலாயை
139. நிர்க்குணாயை
140. நிஷ்கலாயை
141. சாந்தாயை
142. நிஷ்காமாயை

---

123. சரத்கால நவராத்திரியில் பூஜிக்கத்தக்கவள். (ஒ. சரத்-காலே புரா யஸ்மாந்-நவம்யாம் போதிதா ஸுரை:। காளிகா புராணம்.)
124. 'சர்வர்' என்ற சிவமூர்த்தியின் பத்னி.
125. சுகத்தைக் கொடுப்பவள்.
126. சங்கரர் பத்னி.
127. ஸ்ரீயைக் கொடுப்பவள். (ஸ்ரீ என்பது செல்வம், இன்பம், அழகு, மங்களம், காந்தி, காம்பீர்யம் முதலியவற்றைக் குறிக்கும்.)
128. பதிவிரதை. ('ஸதீ ஸாத்வீ பதிவ்ரதா'—அமரம்.)
129. சரத்கால சந்திரன் போன்ற முகமுள்ளவள்.
130. நுட்பமான வயிறுள்ளவள். (ஒ. 'மித்யா-த்ருஷ்டாந்த மத்ய-பாகம் தே')
131. பொறுமையுள்ளவள்.
132. இனி நிர்க்குணத்தியானம்.—(தான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய்) தனக்கு ஆதாரம் வேண்டாதவள்.
133. (அஞ்ஜனமாவது மை அல்லது அவித்தை.) மாசற்றவள்.
134. பற்றில்லாதவள். (ஒ. ந மாம் கர்மாணி லிம்பந்தி கீ. 4. 14.)
135. அழுக்கற்றவள். (மும்மலமும் இல்லாதவள்.)
136. நித்தியமானவள். (மாறுதலற்றவள்.)
137. உருவில்லாதவள். (ஒ. ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி—தை ஆ.)
138. கலக்கமற்றவள். (கலக்கமுடையவரால் அடைய முடியாதவள்.)
139. முக்குணங்களுக்கப்பாற்பட்டவள்.
140. கூறுபடாதவள். (அகண்ட ரூபிணீ.)
141. சாந்தமூர்த்தி.
142. விருப்பமில்லாதவள். (எல்லா விருப்பங்களும் பூர்த்தியானவள்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

143. நிருபப்லவாயை
144. நித்யமுக்தாயை
145. நிர்விகாராயை
146. நிஷ்ப்ரபஞ்சாயை
147. நிராச்ரயாயை
148. நித்ய-சுத்தாயை
149. நித்ய-புத்தாயை
150. நிரவத்யாயை
151. நிரந்தராயை
152. நிஷ்காரணாயை
153. நிஷ்கலங்காயை
154. நிருபாதயே
155. நிரீச்வராயை
156. நீராகாயை
157. ராகமதன்யை
158. நிர்மதாயை
159. மதநாசின்யை
160. நிச்சிந்தாயை

---

143. அழிவில்லாதவள்.
144. என்றும் முக்திஸ்வரூபிணி.
145. மாறுதலில்லாதவள்.
146. பிரபஞ்சத்திற்குக் கட்டுப்படாதவள் (ஒ. ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம்—மா. உப.)
147. ஆசிரயம் இல்லாதவள்.
148. என்றும் பரிசுத்தமானவள். (ஒ. ‘ அஸ்பர்சச்ச மஹான் சுசி:’)
149. என்றும் அறிவு மயமானவள்.
150. குற்றமில்லாதவள்.
151. இடைவெளி இல்லாதவள். (ஒ. உதர-மந்தரங்-குருதே | அத தஸ்ய பயம் பவதி- தை. உப. 2.7.)
152. காரணமில்லாதவள்.
153. களங்கமில்லாதவள்.
154. உபாதியில்லாதவள்.
155. (தானே அனைத்தையுமாள்பவளாய்த்) தன்னையடக்கி யாள்வாரில்லாதவள்.
156. ஆசையற்றவள். (ஆசை யென்ற பாசத்தை ஆயுதமாகக் கூறியது ஸகுண வடிவத்திற்கு; இப்போது கூறுவது நிர்க்குணத் தியானமும் அதன் பலனும்.)
157. ஆசையைப் போக்குபவள். (பக்தர்களுக்கு வைராக்கியத்தை வளர்ப்பதால்.)
158. மதமில்லாதவள்.
159. மதத்தை நாசம் செய்பவள்.
160. கவலையில்லாதவள். (ஒ. ‘ சிதா தஹதி நிர்ஜீவம் சிந்தா தஹதி ஜீவிதம் ’)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

161. நிரஹங்காராயை
162. நிர்மோஹாயை
163. மோஹ-நாசின்யை
164. நிர்மமாயை
165. மமதாஹந்த்ர்யை
166. நிஷ்பாபாயை
167. பாபநாசின்யை
168. நிஷ்க்ரோதாயை
169. க்ரோத-சமன்யை
170. நிர்-லோபாயை
171. லோபநாசின்யை
172. நிஸ்ஸம்சயாயை
173. ஸம்சயக்ன்யை
174. நிர்ப்பவாயை
175. பவ-நாசின்யை
176. நிர்விகல்பாயை

---

161. அஹங்கார மில்லாதவள்,

162. மதிமயக்க மில்லாதவள். (ஒ. தத்ர கோ மோஹ: க: **சோக** ஏகத்வ-மனு-பச்யத: ஈச.உப. 7.)

163. மதிமயக்கத்தைப் போக்குபவள்.

164. மமதையில்லாதவள். (அ. ஸ்வாபின்ன-இதர-அபாவா.)

165. மமதையைப் போக்குபவள்.

166. பாவ மற்றவள்.

167. பாவத்தைப் போக்குபவள். (ஒ. 'த்த்யதேஷிகாதூல-மக்னௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மான: ப்ர-தூயந்தே'—சா. உப. 5.24.3)

168. கோபமில்லாதவள். (ஒ. ந மே த்வேஷ்யோஸ்தி—கீ. 9. 29.)

169. கோபத்தை நாசம் செய்பவள். (கோபத்துடன் செய்யப்படும் தானம் யஜ்ஞம் தவம் எல்லாம் வீண்.)

170. லோபமில்லாதவள்.

171. லோபத்தைப் போக்குபவள். (ஒ. த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன-மாத்மன:| காம:க்ரோதஸ்-ததா லோபஸ்-தஸ்மா-தேதத்-த்ரயம் த்யஜேத் ||—கீ. 16.21.)

172. ஸந்தேகமற்றவள்.

173. ஸந்தேகத்தைப் போக்குபவள். (ஒ. 'சித்யந்தே ஸர்வ ஸம்சயா:' மு. உப. 2 2.9.)

174. பிறப்பிறப்பு இல்லாதவள்.

175. பிறவி நோயை அகற்றுபவள். (ஒ. தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸார-ஸாகராத்—கீ. 12. 7.)

176. விகல்பமில்லாதவள். (விருப்பத்துக்கு மாறுனது விகல்பம்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

177. நிராபாதாயை
178. நிர்ப்பேதாயை
179. பேத-நாசின்யை
180. நிர்-நாசாயை
181. ம்ருத்யு-மதன்யை
182. நிஷ்க்ரியாயை
183. நிஷ்பரிக்ரஹாயை
184. நிஸ்துலாயை
185. நீலசிகுராயை
186. நிரபாயாயை
187. நிரத்யயாயை
188. துர்லபாயை
189. துர்க்கமாயை
190. துர்க்காயை

---

177. எதனாலும் பாதிக்கப் படாதவள். (ஒ.—ஏமாப்போம் பிணியறி யோம் பணிவோமல்லோம் இன்பமே எந்நாளுந் துன்பமில்லை—அப்பர் தேவாரம்.)

178. வேற்றுமை யில்லாதவள்.

179. வேற்றுமையைப் போக்குபவள்· (ஒ. 'பேதக்ருத் - பாபக்ருத். பவேத்'—லலிதா ஸஹஸ்ரநாமம் பலச்ருதி, 56.)

180. நாசமற்றவள்.

181. (பக்தருக்கு) மரண பயத்தைப் போக்குபவள். (ஒ. மார்க் கண்டேயர்.)

182. கர்மம் இல்லாதவள். (ஒ. 'ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்ய கார்யம் ந வித்யதே'—கீ. 3. 17.)

183. பரிக்கிரஹம் இல்லாதவள். (பிறருடைய உதவியை ஏலாதவள்).

184. ஈடற்றவள்.

185. கரிய கூந்தலுடையவள்.

186. நாசமடையாதவள்.

187. (தான் ஏற்படுத்திய நியதியின்) வரம்பை மீருதவள். (தனது ஆதி சக்தி, பராசக்தி என்ற இரண்டு வடிவங்களுள் ஸ்புரண ரூபிணி யான ஆதிசக்தி வடிவத்தில் எப்பொழுதும் எத்தகைய திரிபும் அற்றவளாய் இருந்து கொண்டே தன்னுடைய பராசக்தி என்ற மாயாசக்தி ரூபத்தில் காரண கார்ய ஸம்பந்த ரூபமான நியதியின் வடிவாகவே இருந்து கொண்டு தானும் அந்த வரம்பை மீற இயலாதவள் போல் இருப்பவள்.)

188. பக்தியில்லாதவர்க்கு எளிதில் அடைய முடியாதவள்.

189. நெருங்க முடியாதவள்.

190. துர்க்கை. (ஒன்பது வயது கன்னிகை.) ஒ. 'துர்க்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி-மசேஷஜந்தோ:'—தேவீமாஹாத்மியம். 4.17.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

191. து:க்கஹந்த்ர்யை
192. ஸுகப்ரதாயை
193. துஷ்டதூராயை
194. துராசார-சமன்யை
195. தோஷவர்ஜிதாயை
196. ஸர்வஜ்ஞாயை
197. ஸாந்த்ர-கருணாயை
198. ஸமானாதிக-வர்ஜிதாயை
199. ஸர்வசக்தி-மய்யை
200. ஸர்வமங்கலாயை
201. ஸத்கதி-ப்ரதாயை
202. ஸர்வேச்வர்யை
203. ஸர்வ-மய்யை
204. ஸர்வ-மந்த்ர-ஸ்வரூபிண்யை
205. ஸர்வ-யந்த்ராத்மிகாயை
206. ஸர்வ-தந்த்ர-ரூபாயை
207. மனோன்மன்யை

---

191. துக்கத்தைத் துடைப்பவள். ஒ. (து:க்கஸம்யோக-வியோகம் யோக ஸம்ஜ்ஞிதம்—கீ. 6.23.)
192. சுகத்தைத் தருபவள். (ஒ. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி—தை, உப, 2.7)
193. துஷ்டர்களுக்குத் தூரத்திலிருப்பவள்.
194. துராசாரங்களைப் போக்குபவள்.
195. தோஷமற்றவள்,
196. (இவை ஸகுண உபாஸனை.) எல்லாமறிந்தவள். (ஒ. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித். மு,உப, 1.1.9)
197. கருணை நிறைந்தவள்.
198. ஒப்புயர்வற்றவள். (ஒ. ந த்வத் ஸமோஸ்த்யப்-யதிக: குதோऽன்ய:—கீ. 11.43.)
199. ஸர்வசக்தி மயமானவள்.
200. ஸர்வ மங்கள ரூபிணி. (ஒ. ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே|. தேவீ மாஹாத்மியம் 11. 10.)
201. நல்ல கதியை அளிப்பவள். (ஒ. 'கதிஸ்த்வம் மதிஸ்த்வம் த்வமேகா [பவானி')
202. எல்லோருக்கும் ஈசுவரி.
203. எல்லா ரூபமாயு மிருப்பவள்.
204. எல்லா மந்திரங்களின் ஸ்வரூபமாகவும் இருப்பவள்:
205. எல்லா யந்திரங்களின் அதிதேவதையாகவும் இருப்பவள்.
206. எல்லாத் தந்திரங்களின் வடிவாயுமிருப்பவள். (தந்திரம் என்பது பூஜாமுறை. ஒ. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்.—கீ. 4.11.)
207. மனோன்மனி ரூபமாக இருப்பவள். (ஒ. 'வாம தேவாய நமோ... மனோன்மனாயநம:' மனோன்மனனாகிய சிவனுடைய சக்தி. ஒ. 'மனச்ச ஸங்கல்ப-விகல்ப-சூன்யம்,மனோன்மனீ.'

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

208. மாஹேச்வர்யை
209. மஹாதேவ்யை
210. மஹாலக்ஷ்ம்யை
211. ம்ருடப்ரியாயை
212. மஹாரூபாயை
213. மஹாபூஜ்யாயை
214. மஹாபாதக-நாசின்யை
215. மஹாமாயாயை
216. மஹாஸத்வாயை
217. மஹாசக்த்யை
218. மஹாரத்யை
219. மஹாபோகாயை
220. மஹைச்வர்யாயை
221. மஹாவீர்யாயை
222. மஹாபலாயை
223. மஹாபுத்த்யை

---

208. மஹேசுவர பத்னீ (ஒ. 'நைர்குண்யேன மஹேச்வர'; லிங்க புராணம்.)

209. மஹாதேவ பத்னி.

210. மஹாலக்ஷ்மி வடிவானவள். (ஒ. ஸர்வஸ்யாத்யா மஹாலக்ஷ்மீ: த்ரிகுணா ஸா வ்யவஸ்திதா—மார்க்கண்டேய புராணம்.)

211. 'ம்ருடன்' என்ற சிவனுக்குப் பிரியை. (ஒ. ஜனஸுகத க்ருதே ஸத்வோத்ரிக்தௌ ம்ருடாய நமோ நம:—சிவ மஹிம்ன ஸ்தவம்).

212. பெரிய உருவம் படைத்தவள். (ஒ. மம யோனிர்-மஹத்ப்ரஹ்ம-கீ. 14.3.)

213. மஹான்களால் பூஜிக்கத்தக்கவள்.

214. மஹா பாதகங்களை நாசஞ்செய்பவள்.

215. மஹா மாயா ரூபிணீ. (ஒ. ஜ்ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா | பலா-தாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி—தேவிமாஹாத்மியம் 1.55.)

216. சுத்த ஸத்வஸ்ரூபிணீ.

217. மிகுந்த ஸாமர்த்தியம் வாய்ந்தவள்.

218. சிறந்த ஆனந்தத்தை அளிப்பவள். (அ. மஹதீ விஷய-ரதிப்யோ ऽதிகா ரதி:)

219. உயர்ந்த போகத்தை யுடையவள்.

220. சிறந்த ஐசுவரியத்தை உடையவள்.

221. வீரியத்தில் மிகுந்தவள். (ஒ. 'ஓஜோऽஸி ஸ்ஹோऽஸி பலமஸி ப்ராஜோऽஸி'. அ. 'வீர்யம் சுக்ரே ப்ரபாவே ச தேஜ: ஸாமர்த்ய யோரபி.'

222. மிகுந்த பலம் வாய்ந்தவள்.

223. பேரறிவு படைத்தவள். (ஒ. 'யேநாச்ருதம் ச்ருதம் பவத்-யமதம் மத-மவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி'—சா. உப. 6.1:3)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

224. மஹாஸித்த்யை
225. மஹாயோகேச்வரேச்வர்யை
226. மஹாதந்த்ராயை
227. மஹாமந்த்ராயை
228. மஹாயந்த்ராயை
229. மஹாஸனாயை
230. மஹாயாக-க்ரமாராத்யாயை
231. மாஹபைரவ-பூஜிதாயை
232. மஹேச்வர-மஹாகல்ப-மஹா தாண்டவ-ஸாக்ஷிண்யை
233. மஹாகாமேச-மஹிஷ்யை
234. மஹாத்ரிபுரஸுந்தர்யை
235. சதுஷ்ஷஷ்ட்யுபசாராட்யாயை
236. சதுஷ்ஷஷ்டி-கலாமய்யை

224. (அஷ்ட) மஹாசித்தி ரூபமானவள். (அணிமா மஹிமா சைவ கரிமா லகிமா ததா | ப்ராப்திः ப்ராகாம்ய-மீசித்வம் வசித்வஞ் சாஷ்ட-பூதயः—அமரம்.)

225. யோகேசுவரர்களுக்கும் ஈசுவரி.

226. தலைசிறந்த தந்திரசாஸ்திரங்களையுடையவள். (ஸ்வதந்த்ராக்யம் தந்த்ரம் ஸ்ரீ வித்யாக்யோ மந்த்ர : ஸித்திவஜ்ராக்யஞ்ச யந்த்ரம் மஹத் ஸர்வோத்தமம் யஸ்யா : || ஒ. சது : ஷஷ்ட்யா தந்த்ரை :— ஸௌ. லஹரீ 31.)

227. தலைசிறந்த மந்திரங்களை யுடையவள். (பஞ்சதசாக்ஷரீ முதலிய மஹாமந்திரங்கள்.)

228. தலைசிறந்த யந்திரங்களையுடையவள். (ஸ்ரீசக்ரம் முதலிய மஹா யந்திரங்கள்).

229. தலை சிறந்த ஆஸனத்தை உடையவள். (மஹான்களின் உள்ள மும், தத்துவபீடங்களும், ஸிம்மமும் தேவியின் ஆஸனம்.)

230. மஹாயாகமுறையில் ஆராதித்தற்குரியவள். (பாவனா யாகமும், தேவர்கள் சிதக்கினி குண்டத்தில் செய்த யாகமும் மஹா யாகங்கள்.)

231. மஹா பைரவரால் பூஜிக்கப்பட்டவள்.

232. மஹா கல்பத்தில் மஹேசுவரர் செய்யும் மஹா தாண்டவத்திற்குச் சாக்ஷியாயிருப்பவள். (ஆண்களின் நடனம் தாண்டவம்; பெண் களின் நடனம் லாஸ்யம். ஒ. தவாதாரே மூலே—ஸௌ லஹரீ 41.)

233. மஹா காமேசரின் பட்டமஹிஷீ.

234. மஹாத்ரிபுரஸுந்தரீ.

235. அறுபத்து நான்கு உபசாரங்களுடன் பூஜித்தற்குரியவள்.

236. அறுபத்து நான்கு கலை வடிவானவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

237. மஹா சதுஃஷஷ்டி கோடி-யோகினி-கண-ஸேவிதாயை
238. மனுவித்யாயை
239. சந்த்ர-வித்யாயை
240. சந்த்ரமண்டல-மத்யகாயை
241. சாருரூபாயை
242. சாருஹாஸாயை
243. சாருசந்த்ர-கலாதராயை
244. சராசர-ஜகந்நாதாயை
245. சக்ர-ராஜ-நிகேதனாயை
246. பார்வத்யை
247. பத்மநயனாயை
248. பத்மராக-ஸமப்ரபாயை
249. பஞ்சப்ரேதாஸனாஸீனாயை

---

237. ('மஹா' என்பது ஒன்பதைக் குறிக்கும்.) அறுபத்து நான்கு கோடி யோகினீ கணங்களால் (நவாவரணத்தில் ஒவ்வொரு சக்கரத்திலும்) சேவிக்கப்பட்டவள். (மனத்தின் கண் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் பல கோடிகள். அந்த ஆற்றல்கள் யாவும் ஸ்வாத்மானந்தத்திலேயே முடிவுகாண்கின்றன.)

238. மனுவினால் உபாசிக்கப்பட்ட ஸ்ரீவித்யாரூபிணீ.

239. சந்திரனால் உபாஸிக்கப்பட்ட ஸ்ரீவித்யா ரூபிணீ. (மனுச்-சந்த்ர: குபேரச்ச லோபாமுத்ரா ச மன்மத: | அகஸ்தி-ரக்னி: ஸூர்யச்ச இந்த்ர: ஸ்கந்த: சிவஸ்-ததா | க்ரோத பட்டாரகோ தேவ்யா த்வாதசாமீ உபாஸகா: || ஒ. 'மஹேச - மாதவ-விதாத்ரு-மன்மத-ஸ்கந்த-நந்தி - இந்த்ர - மனு - சந்த்ர-குபேர-அகஸ்த்ய-க்ரோதபட்டாரக வித்யாத்மிகே'—லலிதோபாக்யானம்.)

240. சந்திரமண்டலத்தின் நடுவிலுள்ளவள். (உள் சந்திர மண்டலமாகிய ஸஹஸ்ரார்ரம் எப்போதும் பூரணகலையுடன் விளங்குவது.)

618. எல்லாவற்றிலும் சிறந்தவள். (அல்லது பரம்பொருளை அளவுக்குட்படுத்தி நமக்குக் காண்பிப்பவள்:—'பரம்-ப்ரஹ்ம-மாதி இதி பரமா.' அல்லது பரப்ரஹ்ம-மஹிஷீ பரமா.' ஒ. மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்ம-மஹிஷீ'—ஸௌ. லஹரீ 97.)

619. பரிசுத்தமே உருக்கொண்டவள். ஒ. வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்—திருப்பாவை 5.)

620. அனேககோடி பிரம்மாண்டங்களைப் படைத்தவள்.

621. அழகிய உருவம் படைத்தவள். (ஆகாயத்தில் நின்று யுத்தம் செய்பவள்.)

622. க்லீங்கார பீஜ வடிவினள்.

623. தான் தானேயாகி நிற்பவள். (அல்லது க்லீங்காரத்தில் 'க'கார, 'ல'காரங்களை விட்டுக் கேவல காம கலா ரூபமான 'ஈங்கார வடிவிலிருப்பவள். 'கேவல துரீய ஸ்வரூபா காம-கலா' ஒ. யதீம் ச்ருணேத்யலகம் ச்ருணேதி ந ஹி ப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தா-மிதி' ஆருணம் 8. 1 'காமபீஜேன த்ரிவர்க்க: காமகலா மாத்ரேண து மோக்ஷ இதி பர்யவஸிதோऽர்த்த:'—பா.)

624. மிக ரகசியமானவள். (அ. 'குஹாம் ப்ரவிஷ்டா குஹ்யா')

625. கைவல்யத்தையும் பதவிகளையும் அளிப்பவள். (அ. கைவல்யஞ் ச பதானி ச தாதும் சீலம் அஸ்யா:—பதவிகள் நான்கு:—ஸாலோக-ஸாருப-ஸாமீப-ஸாயுஜ்யம்; இவை உபாஸனமார்க்க பலன். கைவல்யம் உத்தம ஞானத்தால் எய்தப்பெறும் நித்தியானந்தம்.)

626. மும்மூர்த்திகளுக்கும் மூந்தியவள். (அல்லது மும்மூன்று வடிவான எல்லாவற்றிலும் உறைபவள். ஒ. 'ஸர்வம் த்ரயம் த்ரயம் யஸ்மாத் தஸ்மாத் து த்ரிபுரா மதா.')

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

627. த்ரிஜகத்-வந்த்யாயை
628. த்ரிமூர்த்தயே
629. த்ரிதசேச்வர்யை
630. த்ர்யக்ஷர்யை
631. திவ்ய-கந்தாட்யாயை
632. ஸிந்தூர-திலகாஞ்சிதாயை
633. உமாயை
634. சைலேந்த்ர-தநயாயை
635. கௌர்யை
636. கந்தர்வ-ஸேவிதாயை
637. விச்வ-கர்ப்பாயை
638. ஸ்வர்ண-கர்ப்பாயை
639. அவரதாயை
640. வாகதீச்வர்யை

---

627. மூன்று உலகங்களாலும் வணங்கத் தக்கவள்.

628. மும்மூர்த்தி வடிவானவள்.

629. தேவர்களுக்கெல்லாம் ஈசுவரீ.

630. மூன்று அக்ஷர ரூபமானவள். (பாலா மந்திர ரூபிணீ. 'ஓம் ஜூம் ஸ:' என்ற ம்ருத்யுஞ்ஜய முதலிய மூவெழுத்து மந்திரங்களும் சித் சக்தியின் ஸ்வரூபங்களாக வழிபடப்படும்பொழுது பரதேவதையையே குறிக்கும்.)

631. தெய்வீக வாசனையுடன் கூடியவள். (ஒ. 'கந்த த்வாராம் துராதர்ஷாம்'. ஸ்ரீஸூக்தம்')

632. ஸிந்தூரப் பொட்டால் அலங்கரிக்கப் பெற்றவள்.

633. 'உமா' எனப் பெயர் பெற்றவள். ஏழுவயதுள்ள கன்னிகைக்கு உமா எனப் பெயர். 'உமா' என்பது தேவீ பிரணவம். 'அகார உகார மகாரா மதீயே ப்ரணவே ஸ்திதா:| உகாரஞ்ச மகாரஞ்ச அகாரஞ்ச க்ரமேரிதம்| த்வதீயம் ப்ரணவம் வித்தி த்ரிமாத்ரம் ப்லுத-முத்தமம்||—லிங்க புராணம். பரானுபூதிம் பவபாச-நாசினீம் ஸதாசிவஸ்யாப்யதி-சோபனுட்யாம்| உமாபிதா-முத்தம சித்தவ்ருத்திம் நமாமி நாநாவித லோகவைபவாம்—ஸூதஸம்ஹிதை.

634. பர்வதராஜகுமாரி.

635. கௌரீ. (பத்து வயதுள்ள கன்னிகை கௌரீ. வெளுப்பான நிறமுடையவள்).

636. கந்தர்வர்களால் சேவிக்கப்பட்டவள்.

637. உலகைத் தன் வயிற்றில் தாங்கியவள்.

638. ஹிரண்யகர்ப்ப வடிவானவள்.

639. கொடியவர்களைச் சிக்ஷிப்பவள்.

640. வாக்கிற்கு ஈசுவரீ.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

641. த்யான-கம்யாயை
642. அபரிச்சேத்யாயை
643. ஜ்ஞானதாயை
644. ஜ்ஞானவிக்ரஹாயை
645. ஸர்வவேதாந்த-ஸம்வேத்யாயை
646. ஸத்யானந்த-ஸ்வரூபிண்யை
647. லோபாமுத்ரார்ச்சிதாயை
648. லீலா-க்லுப்த-ப்ரஹ்மாண்ட மண்டலாயை
649. அத்ருச்யாயை
650. த்ருச்ய-ரஹிதாயை
651. விஜ்ஞாத்ர்யை
652. வேத்ய-வர்ஜிதாயை
653. யோகின்யை
654. யோகதாயை

---

641. தியானத்தால் அடையத்தக்கவள். (ஒ. தே த்யான-யோகானுகதா அபச்யன் தேவாத்ம-சக்திம் ஸ்வகுணைர்-நிகூடாம்;—ச்வே. உப. 1. 3.)

642. இந்தக்காலத்தில் இந்த இடத்தில் இப்படி இருப்பவள் என்று குறிப்பிட முடியாதவள். (அங்கிங் கெனுதபடி எங்கும் இருப்பவள்.)

643. ஞானத்தையளிப்பவள். (ஒ. கேன உபநிஷத்து 4. 1.)

644. ஞானமே உருவெடுத்தவள்.

645. எல்லா உபநிஷத்துக்களாலும் அறியப்படுபவள். (வேதாந்தம் அல்லது வேதத்தின் முடிவு உபநிஷத்து.)

646. ஸத்தியமும் ஆனந்தமுமே வடிவாயுள்ளவள். (அல்லது அழியாத ஆனந்தஸ்வரூபிணி.)

647. லோபாமுத்ரையால் பூஜிக்கப்பட்டவள். (அகஸ்தியர் பத்னி லோபாமுத்ரை, 'ஹாதி வித்தையின் ரிஷி. அ. நாமரூப 'லோபம்' அல்லது நீக்கத்தினுல் ஏற்படும் 'முதம்' அல்லது உவகையே லோபாமுத்ரா.)

648. பிரம்மாண்ட மண்டலங்களை விளையாட்டாகச் சிருஷ்டிப்பவள்.

649. (ஊனக்கண்ணுல்) பார்க்க முடியாதவள்.

650. தனக்கு வேருகக் காணப்படுவதான பொருளில்லாதவள். (ஒ. விஜ்ஞாதார-மரே கேன விஜாநீயாத்| ப்ரு. உப. 2-4-14.)

651. எல்லாவற்றையும் அறிவிப்பவள்.

652. அறியவேண்டியது ஒன்றுமில்லாதவள்.

653. யோக ரூபிணி. (ஒ. 'ஜ்ஞானேந்த்ரியாணி ஸர்வாணி நிக்ருஹ்ய மனஸா ஸஹ| ஏகத்வ-பாவனு யோக: க்ஷேத்ரஜ்ஞ-பரமாத்மனே:|| விஷ்ணு புராணம்.)

654. யோகத்தைப்பற்றிய அறிவையும் அனுபவத்தையும் கொடுப்பவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

655. யோக்யாயை
656. யோகானந்தாயை
657. யுகந்தராயை
658. இச்சாசக்தி-ஜ்ஞானசக்தி-க்ரியாசக்தி-ஸ்வரூபிண்யை
659. ஸர்வாதாராயை
660. ஸுப்ரதிஷ்டாயை
661. ஸதஸத்-ரூப-தாரிண்யை
662. அஷ்டமூர்த்யை
663. அஜா-ஜேத்ர்யை
664. லோகயாத்ரா-விதாயின்யை
665. ஏகாகின்யை

---

655. யோகத்தால் அடையத்தக்கவள்.
656. யோகானந்த முள்ளவள். (யோகத்திலும் யோக நித்திரையிலும் ஆனந்தமுள்ளவள்.)
657. நாலு யுகங்களையும் (உலக நியமன சக்தியையும் இரட்டையாயுள்ள ஸகல வஸ்துக்களையும்) தரிப்பவள்.
658. இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி வடிவாயுள்ளவள். (இச்சை சிரஸ், ஞானம் உடல், கிரியை பாதம்.)
659. எல்லாவற்றிற்கும் ஆதாரமானவள்.
660. சிறந்த இருப்பிடமானவள். (மற்ற இருப்பிடங்கள் எப்போதாவது அழியும். இது பிரளயத்திலும் அழியாது. ஒ.—ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி| அவ்யக்தோ ஽க்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாங் கதிம்|| கீதை. 8. 20-21)
661. பாரமார்த்திக ஸத்தையாகவும் வியாவஹாரிக ஸத்தையாகவும் இருப்பவள். (ஒ. ஸத்யஞ்சான்ருதஞ் ச ஸத்ய-மபவத்—தை. 2. 6.)
662. எட்டு வடிவு கொண்டவள். (ஈசுவரன் அஷ்டமூர்த்தி. ஈசுவரியும் அப்படியே. பவன்-சர்வன்-ஈசானன்-பசுபதி-ருத்ரன்-உக்ரன்-பீமன்-மஹான் என்பன எட்டு சிவ நாமங்கள். ஒ. 'பூ-ரம்பாம்ஸ்-யநலோ-஽நில-அம்பர-மஹர்நாதோ-ஹிமாம்சு:- புமா-னித்யாபாதி சராசராத்மக-மிதம் யஸ்யைவ மூர்த்யஷ்டகம்'—தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம். ஒ.' பூமி-ராபோ-஽னலோ-வாயு:-கம்-மனோ-புத்தி-ரேவ ச| அஹங்கார-இதீயம் மே பின்னா ப்ரக்ருதிரஷ்டதா'—கீதை 7. 4.)
663. அவித்தையை ஜயித்தவள். (அ. 'அஜா-மேகாம் இத்யாதி ச்ருதிப்ரஸித்தாயா அவித்யா ரூபாயா அஜாயா ஜேத்ரீ'—பா.)
664. உலகங்களின் யாத்திரையை நடத்திவைப்பவள்.
665. (தன்னையன்றி வேறில்லாமல் தனித்து) ஒருத்தியாயிருப்பவள். (ஒ. 'ஏகைவ லோகான் க்ரஸதி ஏகைவ ஸ்தாபயத்யபி| ஏகைவ ஸ்ருஜதே விச்வம் தஸ்மா-தேகாகினீ மதா'—தேவீபுராணம்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

666. பூம-ருபாயை
667. நிர்த்வைதாயை
668. த்வைத-வர்ஜிதாயை
669. அன்னதாயை
670. வஸுதாயை
671. வ்ருத்தாயை
672. ப்ரஹ்மாத்மைக்ய-ஸ்வரூபிண்யை
673. ப்ருஹத்யை
674. ப்ராஹ்மண்யை

---

666. 'பூமா' என்ற பரமாத்ம ரூபிணீ. (ஒ. யத்ர நான்யத் பச்யதி நான்யச்-ச்ருணோதி நான்யத் விஜானதி ஸ பூமா| யோ வை பூமா தத் ஸுகம் நால்பே ஸுகமஸ்தி| சா. உப. 24. 1. ஒருத்தியாயினும் அனைத்துமாயிருக்குந் தன்மை அவளுடையது. ஒ, 'ஏகோ பூத்வா யதா மேக: ப்ருதக்த்வேன ச திஷ்டதி| வர்ணதோ ரூபதச்சைவ ததா குணவசா-தூமா|| நபஸ: பதிதம் தோயம் யதா நானா ரஸம் பவேத்| பூமே ரஸவிசேஷேண ததா குணவசா-தூமா || யதா வா கார்ஹபத்யோக்னி-ரன்ய-ஸம்ஜ்ஞாந்தரம் வ்ரஜேத், தக்ஷிணாஹவநீயாதி ப்ரஹ்மாதிஷு ததைவ ஸா'|| —தேவீ புராணம்.)

667. எவளது கருணையால் துவைத திருஷ்டி நீங்குமோ அவள். (துவைத தர்சனம் அநித்யமானது, பயத்துடன் கூடியது.)

668. துவைதத்தினின்றும் இயல்பிலே நீங்கியவள். (ஒ. ந புனர் த்வைதம் பூர்வம் ஸ்திதம் பச்சாந் நிர்கதம் | மூலத ஏவ து நாஸ்தித்-யாஹ—பா.)

669. அன்னத்தை அளிப்பவள். (ஜீவாதாரமாயுள்ள அனைத்தையுமளிப்பவள். ஒ. 'உசதீரிவமாதர:' | அன்னபூர்ணே ஸதா பூர்ணே சங்கர ப்ராணவல்லபே | ஜ்ஞான-வைராக்ய-ஸித்த்-யர்த்தம் பிக்ஷாந் தேஹி ச பார்வதி' | சாப்பிடுமுன் இதை ஸ்மரித்தல் எல்லா நன்மைகளையு மளிக்கும்.)

670. செல்வத்தைத் தருபவள்.

671. வயது முதிர்ந்தவள். (ஒ. 'வ்ருத்தத்வம் ஜரஸா விநா' —காளிதாஸன்.)

672. ஜீவப்பிரம்ம ஐக்கிய வடிவானவள். (ஒ. 'ஹம்ஸ-மந்த்ரார்த்த-ரூபிணீ'—த்ரிசதி.)

673. பெரியநாயகி. (ஒ. 'மஹதோ-மஹீயான். அல்லது 'ப்ருஹத் ஸாம' வடிவாகவோ 'ப்ருஹதீ' சந்தஸ் வடிவாகவோ இருப்பவள்.)

674. பிராம்மண பத்னீ. (சிவன் பிராம்மண தெய்வமாகக் கூறப் படுதலால் சிவபத்னீ என்று பொருள். ஒ. ப்ராஹ்மணோ பக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

675. ப்ராஹ்ம்யை
676. ப்ரஹ்மானந்தாயை
677. பலி-ப்ரியாயை
678. பாஷா-ரூபாயை
679. ப்ருஹத்-ஸேனாயை
680. பாவாபாவ-விவர்ஜிதாயை
681. ஸுகாராத்யாயை
682. சுபகர்யை
683. சோபநாயை ஸுலபாயை கத்யை

வான் ஸாம்போ ப்ராஹ்மணானும் ஹி தைவதம்| விசேஷாத் ப்ராஹ்மணோ ருத்ர-மீசானம் சரணம் வ்ரஜேத்'—பராசரர்.)

675. பிரம்மாவின் சக்தி வடிவானவள். (வாக்தேவீ.)

676. பிரம்மானந்த வடிவானவள். (ஒ. 'ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்ய ஜானாத்'—தை. உப. 3. 6. 1.)

677. பலசாலிகளை விரும்புபவள். (வெளிப்பகை உட்பகை எல்லாவற்றையும் ஜயிக்கும் பலசாலிகள் தேவியின் கருணைக்குப் பாத்திரமாகின்றனர். ஒ. 'நாயமாத்மா பலஹீனேன லப்ய:'—மு. உப. 3. 2. 4. அல்லது பூஜையில் அர்ப்பணம் செய்யப் படும் பலியில் பிரிய முள்ளவள். அல்லது பலிசக்கிரவர்த்திக்கு அனுக்கிரஹம் செய்த வாமன ரூபியாகியவள்.)

678. பாஷை வடிவில் விளங்குபவள். (சப்தமெல்லாம் அன்னை; அர்த்தமெல்லாம் சிவன்.)

679. பெரிய சேனைகளை உடையவள். (குமரக்கடவுள் ஸேனாதிபதி.)

680. உற்பத்தியும் அழிவு மில்லாதவள்.

681. சுகமாக ஆராதிக்கக்கூடியவள். (உபவாசமும் காயக்கிலேசமும் கடுமையான விரதங்களும் தேவியின் பிரீதிக்கு அவசியமில்லை. அவற்றை அவள் விரும்புவதுமில்லை. ஒ. கர்சயந்த: சரீரஸ்தம் பூதக்ராம-மசேதஸ:| மாஞ்சைவாந்த: சரீரஸ்தம் தான் வித்த்-யாஸுர-நிச்சயான்—கீதை 17. 6.)

682. மங்களத்தைச் செய்பவள். (அமங்களம் என்பது தேவியை வழிபடுபவர்களுக்கு இல்லை. பூஜையில் குறைகளிருப்பினும் அசுபம் அன்பர்களை அணுகாது. ஒ. 'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே ஆசறு நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே.' —சம்பந்தர் தேவாரம்.)

683. உயர் நலமளிப்பவளாகவும் சுலபமாய் அடையக் கூடியவளாகவும் இருப்பவள். (நித்யானந்தத்தை அளிப்பதால் 'சோபனா'; ஆராதனைக் கெளியவளாதலால் 'ஸுலபா'; நாடியடைய வேண்டிய இடமாதாலால் 'கதி'.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

684. ராஜராஜேச்வர்யை
685. ராஜ்ய-தாயின்யை
686. ராஜ்ய-வல்லபாயை
687. ராஜத்-க்ருபாயை
688. ராஜபீட-நிவேசித-நிஜா ச்ரிதாயை
689. ராஜ்ய-லக்ஷ்ம்யை
690. கோச-நாதாயை
691. சதுரங்க-பலேச்வர்யை
692. ஸாம்ராஜ்ய-தாயின்யை
693. ஸத்யஸந்தாயை
694. ஸாகர-மேகலாயை
695. தீக்ஷிதாயை

---

684. இராஜாதிராஜர்களுக்கும் ஈசுவரீ. (தேவராஜன், யக்ஷராஜன், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் முதலியவர்களுக்கும் ஈசுவரி.)

685. ராஜ்யத்தை அளிப்பவள். (ஸ்வாராஜ்யம் வைகுண்டம் கைலாஸம் எல்லாவற்றையும் அளிப்பவள்.)

686. ராஜ்யங்களில் பிரியமுள்ளவள். (அல்லது அந்த ராஜ்யங்களை ஆள்பவர்களிடம் பிரியமுள்ளவள்.)

687. எங்கும் பிரகாசிக்கும் கிருபை யுடையவள். (அன்னையின் கருணை உலகப் பிரசித்தம். அது பிரகாசிக்காத இடம் இல்லை.)

688. தன்னை நாடியவர்களை அரச பீடத்தில் அமர்த்தி வைப்பவள்.

689. ராஜ்யலக்ஷ்மியாக இருப்பவள். (ராஜ்யத்திற்கு வேண்டிய தனம், தான்யம், யானை, குதிரை, சேனை முதலிய அனைத்து மாயிருப்பவள்.)

690. கோசங்களின் அதீசுவரீ. (பொக்கிஷத்தை ரக்ஷிப்பவள் அல்லது அன்னமயம் முதலிய பஞ்சகோசங்களுக்கு நாயகி.)

691. சதுரங்க சேனைக்கு ஈசுவரீ. (மனம்-புத்தி-சித்தம்-அஹங்காரம் என்ற நான்கு வ்யூஹங்கள் ஜீவாத்மாவின் அந்தரங்க சேனாபலம். இவற்றில் வாசுதேவன், பிரத்யும்னன், அநிருத்தன் ஸங்கர்ஷணன் என்ற நான்கு வடிவில் இருந்து காப்பவள்,)

692. ஸாம்ராஜ்ய (சக்ரவர்த்தி) பதவியை (அடியாருக்கு) அளிப்பவள். (ஒ. 'ஆப்னோதி ஸ்வாராஜ்யம்' —தை. உப. 1.6.)

693. ஸத்தியமான பிரதிஜ்ஞையுள்ளவள். (ஒ. ஸத்யவ்ரதம் ஸத்ய பரம் த்ரிஸத்யம் ஸத்யஸ்ய யோநிம் நிஹிதஞ்ச ஸத்யே—ஸ்ரீமத் பாகவதம். 10.2.26.)

694. கடல் சூழ்ந்த பூமி வடிவானவள். (இதுவரை 'ராஜராஜேசுவரீ' என்ற நாமத்தின் விளக்கம்).

695. தீக்ஷையளிப்பவள். அல்லது (பக்தஸம்ரக்ஷணத்திலும் துஷ்ட நிக்ரஹத்திலும் உறுதிபூண்டவள். அல்லது தீக்ஷை செய்துகொண்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

696. தைத்ய-சமன்யை
697. ஸர்வலோகவசங்கர்யை
698. ஸர்வார்த்த-தாத்ர்யை
609. ஸாவித்ர்யை
700. ஸச்சிதானந்த-ரூபிண்யை
701. தேசகாலாபரிச்சின்னுயை
702. ஸர்வகாயை
703. ஸர்வமோஹின்யை
704. ஸரஸ்வத்யை
705. சாஸ்த்ர-மய்யை

வர் வடிவாயிருப்பவள். ஒ. தீயதே க்ருபயா சிஷ்யே க்ஷீயதே பாபஸஞ்சய: இதி தீக்ஷா'—பரானந்த தந்த்ரம். ஒ. சாம்பவீதி ச சக்தீ ச மந்த்ரீசைவ சிவாகமே। தீக்ஷோப-த்ருச்யதே த்ரேதா சிவேந பரமாத்மனு || குரோ-ராலோக-மாத்ரேண ஸ்பர்சாத் ஸங் தர்சனு தபி| ஸத்ய: ஸம்ஜ்ஞா பவேஜ்-ஜந்தோர்-தீக்ஷா ஸா சாம் பவீ மதா || சக்தி ஜ்ஞானவதீ தீக்ஷா சிஷ்ய-தேஹம் ப்ரவிச்யதி| குருணு ஜ்ஞான-மார்க்கேண க்ரியதே ஜ்ஞான-சக்ஷுஷா || மந்த்ரீ க்ரிய-வதீ தீக்ஷா கும்ப-மண்டல-பூர்விகா ||' சாம்பவீ தீக்ஷைக்குக் கால நியமமோ வேறு நியமமோ இல்லை, மந்த்ர உபதேசம் பெறுதற்கோ விசேஷ விரதங்களையும் யாகங்களையும் அனுஷ் டித்தற்கோ மேற்கொள்ளும் நியம நிஷ்டைகளும் தீக்ஷை என கூறப்படும்.)

696. அசுரர்களை அடக்குபவள்.
697. உலகையெல்லாம் தன்வசங் கொண்டவள்.
698. எல்லாப் புருஷார்த்தங்களையும் அளிப்பவள்.
699. ஸாவித்ரீ. (அ. 'ஸவித்ரு - ப்ரகாசகரணுத் ஸாவித்ரீத்யபிதா பவேத்| ஜகத: ப்ரஸவித்ரீதி ஹேதுநானேன வாபி ச'.)
700. ஸச்சிதானந்த ரூபிணீ.
701. தேசத்தாலும் காலத்தாலும் பிரிக்கப்படாதவள். (ஒ. பூர்வேஷா மபி குரு: காலேனுனவச்சேதாத்| —யோக ஸூத்ரம்.)
702. எங்கும் நிறைந்திருப்பவள்.
703. எல்லோரையும் மோஹிக்க செய்பவள். (ஒ. அஜ்ஞானேனு-வ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: —கீதை 5. 15.)
704. ஸரஸ்வதீ வடிவினள்.
705. சாஸ்திர வடிவினள். (சாஸ்திரத்தாலேயே அறியத்தக்கவள். அதற்காகவே சாஸ்திரங்களை உண்டாக்கியவள். ஒ. சாஸ்த்ர யோனித்வாத்.—ப்ரம்மஸூத்ரம். 1. 1. 3.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

706. குஹாம்பாயை
707. குஹ்ய-ரூபிண்யை
708. ஸர்வோபாதி-விநிர்முக்தாயை
709. ஸதாசிவ-பதிவ்ரதாயை
710. ஸம்ப்ரதாயேச்வர்யை
771. ஸாதுனே
712. ஈ
713. குருமண்டல-ரூபிண்யை
714. குலோத்தீர்ணயை
715. பகாராத்யாயை
716. மாயாயை

706. குஹப்பெருமானின் தாய். (அல்லது இருதய குகையிலிருப்பவள்.)

707. இரகசியமான ரூபமுள்ளவள். (அதனால் தான் அவளை உண்மையில் அறிபவர் அரிதாகின்றனர். ஒ. 'யததா-மபி ஸித்தானும் கச்சின்-மாம் வேத்தி தத்வத:|—கீதை. 7. 3. ச்ருத்வாப் யேனம் வேத ந சைவ கச்சித்—கீதை. 2. 29.)

708. ஒருவித உபாதியும் இல்லாதவள்.

709. ஸதாசிவ பதிவ்ரதை.

710. ஸம்பிரதாயத்திற்கு ஈசுவரீ. (குருசிஷ்யக் கிரமமாக வரும் தர்மம் ஸம்பிரதாயம் எனப்படும். அ. 'ஸம்யக் சிஷ்யேப்ய: ப்ரதீயத இதி ஸம்ப்ரதாய:')

711. (தர்மியான சிவனுக்குத் தர்ம ரூபமாக இருக்க) யுக்தமானவள்.

712. 'ஈ' என்ற அக்ஷர (காமகலா) வடிவானவள். ('ஈ' என்பதை 'அ'காரத்தின் உடையது அல்லது உடன் பிறந்தது என்று கொண்டால் 'அ' விஷ்ணுவையும் 'ஈ' விஷ்ணு சகோதரியான சக்தியையுங் குறிக்கும். ஒ. ஏகமேவ ப்ரஹ்ம தர்மோ தர்மீதி ரூபத்வயம் ப்ராபத்| தத்ர தர்ம: புன: புமான் ஸ்த்ரீரிதி த்விதா பவத்| தத்ர ஸ்த்ரீ பரசிவ-மஹிஷீத்வம் ப்ராபத், புமான் விஷ்ணு: ஸகல ஜகதுபாதானதாம்| ஏதத்-த்ரயமபி மிலித்வைக-மகண்டம் ப்ரஹ்மேதி சைவமத-ப்ரக்ரியா கூர்மபுராணாத்யனுயாயினீ ரத்ன-த்ரய பரீக்ஷாயாம் தீக்ஷிதைர்-விஸ்தரேண நிருபிதா஽னுஸந்தேயா|—பா.)

713. குருமண்டல ரூபமாக இருப்பவள், (அன்னை குருமண்டலமாயிருந்து காமகலா ரகசியத்தை உணர்த்துகிறாள்.)

714. (குலம் எனும்) இந்திரிய சமூகத்திற்கு எட்டாமலிருப்பவள்.

715. சூரிய மண்டலத்தில் ஆராதிக்கத்தக்கவள்.

716. மாயை எனப்படுபவள். (ஒ. விசித்ர-கார்யகரணா அசிந்தித பல-ப்ரதா| ஸ்வப்னேந்த்ரஜாலவல்-லோகே மாயா தேன ப்ரகீர்த்திதா ||—தேவீ புராணம்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

717. மதுமத்யை
718. மஹ்யை
719. கணாம்பாயை
720. குஹ்யகாராத்யாயை
721. கோமலாங்க்யை
722. குருப்ரியாயை
723. ஸ்வதந்த்ராயை
724. ஸர்வதந்த்ரேச்யை
725. தக்ஷிணாமூர்த்தி ரூபிண்யை
726. ஸநகாதி-ஸ்மாராத்யாயை
727. சிவஜ்ஞாந-ப்ரதாயின்யை
728. சித்-கலாயை
729. ஆனந்த-கலிகாயை
730. ப்ரேம-ரூபாயை
731. ப்ரியங்கர்யை
732. நாம-பாராயண-ப்ரீதாயை

---

717. (யோகப்படிகளில் ஏழாவது பூமிகையான) மதுமதீ வடிவானவள்.

718. பூமி ரூபமாயிருப்பவள்.

719. கணங்களுக்கும் கணேசனுக்குந் தாய்.

720. இரகசியமான இடத்தில் பூஜித்தற்குரியவள்.

721. கோமளமான அங்கங்களுடையவள்.

722. குரு பத்னீ. (குருவுக்குப் பிரியமானவள் அல்லது குருவிடம் பிரியமுள்ளவள்.)

723. சுதந்திரம் படைத்தவள். (அல்லது எல்லாத் தந்திரங்களையும் தனதாக்கிக் கொண்டவள். 'ஸ்வதந்த்ரம்' எனும் தந்த்ர வடிவானவள். ஒ. ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதி-தல-மவாதீதரதிதம்—ஸௌ. லஹரீ 31.)

724. ஸர்வ தந்த்ரங்களுக்கும் ஈசுவரீ.

725. தக்ஷிணாமூர்த்தி வடிவானவள்.

726. ஸநகாதிகளால் நன்கு ஆராதிக்கப்பட்டவள்.

727. சிவமான அறிவை அளிப்பவள். (அல்லது சிவ தத்துவத்தை உணர்த்துபவள்.)

728. சித்கலையாக இருப்பவள், (எங்குமுள்ள சைதன்யம் ஜீவனுடைய அந்தக்கரணத்தில் சித்ரூபமாகப் பிரகாசிக்கின்றது.)

729. ஆனந்தத்தின் அம்ச கலையாக (ஜீவர்களிடம்) இருப்பவள். (ஒ, ஏதஸ்யைவானந்தஸ்ய அன்யானி பூதானி-மாத்ரா-முபஜீவந்தி—ப்ரு. உப. 4. 3. 32.)

730. பிரேமை வடிவானவள்.

731. பிரியத்தைச் செய்பவள்.

732. நாம பாராயணத்தால் மகிழ்ச்சியடைபவள். (ஒ. 'மாமர்ச்சயது வா மா வா வித்யாம் ஜபது வா ந வா| கீர்த்தயேந் நாம-ஸாஹஸ்ரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

733. நந்தி-வித்யாயை
734. நடேச்வர்யை
735. மித்யாஜக-ததிஷ்டாநாயை
736. முக்திதாயை
737. முக்திரூபிண்யை
738. லாஸ்ய-ப்ரியாயை
739. லயகர்யை
740. லஜ்ஜாயை
741. ரம்பாதி-வந்திதாயை
742. பவ-தாவ-ஸுதா-வ்ருஷ்ட்யை
743. பாபாரண்ய-தவாநலாயை

இதம் மத்ப்ரீதயே ஸதா' || ஸஹஸ்ர நாம பாராயணத்தைப் போல் அக்ஷர நாம பாராயணத்தாலும் தேவி மகிழ்கிருள். ஸ்வரங்கள் (விமர்சனம்) 16; வ்யஞ்ஜனங்கள் (ப்ரகாசம்) 35 × 16 = 560 ஆக 576. இவை ஒவ்வொன்றுக்கும் 36 மந்திரமாக 576 × 36 அல்லது 20736 மந்திரங்கள். அவை பின்வருமாறு. (1) அம்-கம்-அம்-ஆம்-ஈம்-நம: (2) அம்-கம்-கம்-ஆம்-ஈம்-நம: (3) அம்-கம்-கஉம்-ஆம்-ஈம்-நம: (4) அம்-கம்-கும்-ஆம்-ஈம்-நம: (5) அம்-கம்-கூம்-ஆம் ஈம்-நம: (6) அம்-கம்-நம்-ஆம்-ஈம்-நம:— 'ஆ ஈ பல்லவிதை: பரஸ்பர யுதைர்-த்வி-த்ரிக்ரமாத் யக்ஷரை: காதிக்ஷாந்த-கதை: ஸ்வராதிபி-ரந் க்ஷாந்தைச்ச தை: ஸஸ்வர:| நாமானி த்ரிபுரே பவந்தி கலுயாந்த்-யத்யந்த கோப்யாவி தே தேப்யோ பைரவ-பத்னி விம்சதி-ஸஹஸ்ரேப்ய: பரேப்யோ நம: ||')

733. நந்திதேவரால் உபாசிக்கப்பட்ட வித்யா ரூபிணி.

734. (சிதம்பரத்தில்) நடனம் செய்யும் நடராஜனை யனுசரித்து நடனம் செய்யும் ஈசுவரி.

735. பொய்யான உலகத் தோற்றத்திற்கு அதிஷ்டானமாயிருப்பவள். (ஒ. 'யத்ர த்ரிஸர்க்கோ ம்ருஷா'—ஸ்ரீமத்பாகவதம் 1.1.1.)

736. மோக்ஷமளிப்பவள்.

737. (தானே) மோக்ஷ ஆனந்தமாயிருப்பவள்.

738. (லாஸ்ய) நர்த்தனத்தில் பிரியமுள்ளவள்.

739. லயத்தைச் செய்பவள். (கீதத்தையும் நர்த்தனத்தையும் தாளத்தில் ஒன்றுபடுத்துவது லயம். ஸ்வரம் மாதா, லயம் பிதா என்பர். மனதைத் தியானத்தில் ஒடுக்குவது லய யோகம். ஒ. 'யச்சேத் வாங்மானஸீ ப்ராஜ்ஞ:' கட. உப. 3. 13.)

740. லஜ்ஜை வடிவினள். (ஹ்ரீம் பீஜம் லஜ்ஜா பீஜ மெனப்படும். ஒ. லஜ்ஜாபத-ஸமாராத்யா.—த்ரிசதீ.)

741. ரம்பை முதலியவர்களால் வணங்கப்பட்டவள்.

742. பிறவித்துன்பமாகிய காட்டுத்தீக்கு அமிருத மழையாயிருப்பவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

744. தௌர்ப்பாக்ய-தூல-வாதூலாயை
745. ஜராத்வாந்த-ரவிப்ரபாயை
746. பாக்யாப்தி-சந்த்ரிகாயை
747. பக்த-சித்த-கேகி-கனா-கனாயை
748. ரோக-பர்வத-தம்போலயே
749. ம்ருத்யு-தாரு-குடாரிகாயை
750. மஹேச்வர்யை
751. மஹாகால்யை
752. மஹாக்ராஸாயை
753. மஹாசனாயை
754. அபர்ணாயை
755. சண்டிகாயை
756. சண்டமுண்டாஸுர-நிஷூதின்யை

---

743. பாவமென்னும் (முள் நிறைந்த) வனத்திற்குப் பெருந்தீயாக இருப்பவள்.

744. துர்ப்பாக்கியமாகிய இலவம் பஞ்சைப் பறக்கடிக்கும் சுழல் காற்றுப் போன்றவள்.

745. மூப்பாகிய இருளை விழுங்கும் சூரியகாந்தி.

746. பாக்கியமாகிய கடலுக்கு நிலவுபோன்றவள். (நிலவு கடலைப் பொங்கச் செய்யும்.)

747. பக்தர்களின் மனமாகிய மயிலுக்கு மேகம் போன்றவள். (ஒ. ஆகாசேன சிகீ—சிவானந்த லஹரீ 53.)

748. நோய் எனும் மலையைப் பிளக்கும் வஜ்ராயுதம் போன்றவள்.

749. மரணமாகிய மரத்தை விழ்த்தும் கோடரி போன்றவள். (ஒ. ம்ருத்யுர்-யஸ்யோபஸேசனம்—கட. உப. 2. 2. 25.)

750. மஹேசுவரீ.

751. மஹாகாளீ. (அ. 'காலயதீதி காலீ ம்ருத்யோரபி காலனாத்.' ஒ. ஏதத்-தம்ப-ஸதிதந்து நேதி நः சங்கயா ஹ்ருதி விகல்ப-லக்ஷணः| யோ யமः ஸ கலு கால்யதே த்வயா பூத-ஸம்யமன-கேலி கோவிதா'—காளிதாஸன்.)

752. பெருங்கவளங் கொள்பவள். (ஒ. 'அத்தா சராசர-க்ரஹணாத்'—பிரம்மஸூத்ரம்—1. 2. 9. அம்பிகையின் பாஹந்தாஸ்வருபத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் விழுங்கப்படுகின்றன.)

753. பெருந்தீனியுள்ளவள்.

754. (யாருக்குங்) கடன்படாதவள். (அல்லது இலையைக்கூடப்புசிக்காமல் தவஞ்செய்தவள்.)

755. கோபங்கொண்டவள்.

756. சண்டன் முண்டன் என்ற அசுரர்களைக் கொன்றவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

757. க்ஷராக்ஷராத்மிகாயை
758. ஸர்வலோகேச்யை
759. விச்வ-தாரிண்யை
760. த்ரிவர்க்க-தாத்ர்யை
761. ஸுபகாயை
762. த்ர்யம்பகாயை
763. த்ரிகுணாத்மிகாயை
764. ஸவர்க்காபவர்க்கதாயை
765. சுத்தாயை
766. ஜபாபுஷ்ப-நிபாக்ருதயே
767. ஓஜோவத்யை
768. த்யுதி-தராயை
769. யஜ்ஞ-ரூபாயை
770. ப்ரிய-வ்ரதாயை
771. துராராத்யாயை
772. துராதர்ஷாயை
773. பாடலீ-குஸும-ப்ரியாயை
774. மஹத்யை
775. மேரு-நிலயாயை

757. அழிவுள்ளதும் அழிவில்லாததுமான அனைத்துமாயிருப்பவள். (ஒ. க்ஷர:ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே–கீதை 15.16.)
758. எல்லா உலகங்களுக்கும் ஈசுவரீ.
759. உலகனைத்தையும் தாங்குபவள்.
760. அறம் பொருள் இன்பமாகிய மூன்றையு மளிப்பவள்.
761. (ஸ்ரீ, காமம், மாஹாத்மியம், வீர்யம், யத்னம், கீர்த்தி, முதலிய) ஸௌபாக்கிய வடிவினள்.
762. முக்கண் படைத்தவள். (அல்லது மும்மூர்த்திகளுக்குந் தாய்-அ "த்ரீண்யம்பகானி நேத்ராணி யஸ்யா:] த்ரயாணும் ப்ரஹ்ம. விஷ்ணு-ருத்ராணு-மம்பிகா மாதா வா".)
763. முக்குண வடிவானவள். (தமோகுணத்தால் காளீ, ரஜோ குணத்தால் துர்க்கை, ஸத்வ குணத்தால் பார்வதீ.)
764. ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையுந் தருபவள்.
765. சுத்தமானவள். (அவித்தையாகிய அழுக்கில்லாதவள்.)
766. செம்பருத்திப்பூ வர்ண முடையவள்.
767. 'ஓஜஸ்' உடையவள். (இந்திரியங்களின் கூர்மையும் வன்மையும்.)
768. ஒளிபொருந்தியவள்.
769. யஜ்ஞ வடிவினள்.
770. விரதங்களில் பிரியமுள்ளவள்.
771. ஆராதித்தற்கரியவள்.
772. வெல்லமுடியாதவள்.
773. பாதிரிப்பூவில் பிரியமுள்ளவள்.
774. பெரியவள்.
775. மேருவில் இருப்பவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

0. In Public Domain, Muthulakshmi Research Academy

776. மந்தார-குஸும-ப்ரியாயை
777. வீராராத்யாயை
778. விராட்-ரூபாயை
779. விரஜஸே
780. விச்வதோ-முக்யை
781. ப்ரத்யக்-ரூபாயை
782. பராகாசாயை
783. ப்ராணதாயை
784. ப்ராண-ரூபிண்யை
785. மார்த்தண்ட-பைரவாராத்யாயை
786. மந்த்ரிணீ-ந்யஸ்த-ராஜ்யதுரே
787. த்ரிபுரேச்யை
788. ஜயத்-ஸேநாயை
789. நிஸ்த்ரைகுண்யாயை
790. பராபராயை
791. ஸத்யஜ்ஞானனந்த ரூபாயை
792. ஸாமரஸ்ய-பராயணுயை
793. கபர்தின்யை

---

776. மந்தாரப்பூவில் பிரியமுள்ளவள்.
777. வீரர்களால் ஆராதிக்கப்பட்டவள்.
778. விராட் வடிவானவள்.
779. மாசற்றவள்.
780. எங்கும் முகமுள்ளவள். (எல்லோருடைய கண்கள் வழியாகவும் பார்ப்பவள்.)
781. உள் நோக்கில் விளங்கும் ஆன்ம வடிவினள்.
782. பரம ஆகாசரூபிணீ. (ஒ. ஸைஷா பார்க்கவீ வாருணீ வித்யா। பரமே வ்யோமன் ப்ரதிஷ்ட்டிதா। தை. உப. 3. 6.)
783. பிராணனைக் கொடுப்பவள்.
784. பிராணனுக இருப்பவள்.
785. மார்த்தண்ட பைரவரால் பூஜிக்கப்பட்டவள். (மல்லன் என்ற அசுரனைக் கொன்றதால் மார்த்தண்ட பைரவருக்கு மஹாராஷ்டிரத்தில் மல்லாரி என்று பெயர்.)
786. மந்த்ரிணீயிடம் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்தவள்.
787. த்ரிபுரேசீ (ஸர்வாசாபரிபூரக சக்ரத்தின் அதிஷ்டான தேவதை).
788. சத்துருக்களை ஜயிக்கும் சேனைகளையுடையவள்.
789. முக்குணங்களைக் கடந்தவள். (கீதை வர்ணிக்கும் குணுதீதன் அம்பிகையின் வடிவமே.)
790. பரமாகவும் அபரமாகவும் இருப்பவள்.
791. ஸத்ய-ஜ்ஞான-ஆனந்த வடிவினள்.
792. ஸமரஸத்தில் நிலை பெற்றவள்.
793. ('கபர்த்தி' என்ற ஜடாதாரியான) சிவனுடைய பத்தினி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

794. கலாமாலாயை
795. காமதுஹே
796. காமரூபிண்யை
797. கலாநிதயே
798. காவ்யகலாயை
799. ரஸஜ்ஞாயை
800. ரஸசேவதயே
801. புஷ்டாயை
802. புராதநாயை
803. பூஜ்யாயை
804. புஷ்கராயை
805. புஷ்கரேக்ஷணாயை
806. பரஸ்மை ஜ்யோதிஷே
807. பரஸ்மை தாம்னே
808. பரமாணவே
809. பராத்பராயை
810. பாச-ஹஸ்தாயை
811. பாசஹந்த்ர்யை

---

794. கலைகளை மாலையாகத்தரித்தவள்.
795. (பக்தர்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்விக்கும்) காமதேனு.
796. காமரூபிணீ (நினைத்த வடிவெடுப்பள்).
797. கலைகளின் நிதி.
798. காவியக் கலையாயிருப்பவள்.
799. ரஸத்தை அறிந்தவள்.
800. ரஸத்தின் பொக்கிஷம். (ஒ. ரஸோ வை ஸ:—தை. உப. 2. 7.)
801. புஷ்டியாயிருப்பவள். (அன்பான ஆராதனையால் போஷிக்கப் பட்டவள்.)
802. புராதனமானவள். (ஒ. 'முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே'—திருவெம்பாவை 9.)
803. பூஜிக்கத்தக்கவள்.
804. புஷ்டியை யளிப்பவள்.
805. கமலம் போன்ற கண்களை யுடையவள்,
806 பரஞ்ஜோதி. (ஒ, 'தத் தேவா ஜ்யோதிஷாஞ் ஜ்யோதி-ராயுர்-ஹோபாஸதே ஃம்ருதம்'—ப்ரு. உப. 4.4.16.)
807. உத்தமமான இருப்பிடம். (ஒ. 'யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே தத் தாம பரமம் மம'—கீதை 8.21.)
808. பரமாணு.
809. சிறந்தவர்களுக்கும் சிறந்தவள். (மும்மூர்த்திகளை விடச் சிறந்தவள்).
810. பாசத்தைக் கையில் உடையவள்.
811. பாசங்களைப் போக்குபவள். (ஆசை, அவித்தை முதலியன பாசங்கள்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

812. பரமந்த்ர-விபேதின்யை
813. மூர்த்தாயை
814. அமூர்த்தாயை
815. அநித்ய-த்ருப்தாயை
816. முனி-மானஸ-ஹம்ஸிகாயை
817. ஸத்ய-வ்ரதாயை
818. ஸத்ய-ரூபாயை
819. ஸர்வாந்தர்யாமின்யை
820. ஸத்யை
821. ப்ரஹ்மாண்யை
822. ப்ரஹ்மணே
823. ஜனன்யை
824. பஹுரூபாயை
825. புதார்ச்சிதாயை

---

812. எதிரிகளின் (அஸ்திர அபிசார) மந்திரங்களின் சத்தியைப் பிளப்பவள் (அல்லது சிறந்த மந்திரமான பஞ்சதசாக்ஷரியின் பல பேதங்களைக் கற்பித்தவள்).

813. உருவுடையவள். (ஒ. 'த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தஞ்ச அமூர்த்தஞ்ச'—ப்ரு. உப. 2. 3.1)

814. உருவில்லாதவள்.

815. அழிவுள்ள பொருள்களாலும் செய்யப்படும் உபசாரங்களால் திருப்தியடைபவள். (ஒ. 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்'— கீதை 9.26.)

816. முனிவர்கள் மனத் தடாகத்தில் உள்ள ஹம்ஸம் (ஒ. 'ஸமுன்மீலத் ஸம்வித்-கமல-மகரந்தைக-ரஸிகம்—ஸௌ. லஹரீ. 38).

817. ஸத்திய விரத முடையவள். (உண்மை பேசுதல் என்ற விரதத்தால் அடையத்தக்கவள்.)

818. ஸத்தியமான (முக்காலத்தும் அழியாத) ரூபத்தை உடையவள். (ஸத்தியத்தையே ரூபமாக உடையவள்.)

819. எல்லாப் பிராணிகளிடத்தும் அந்தர்யாமியாயிருப்பவள். (ஒ. ஏஷ த ஆத்மா அந்தர்யாம்-யம்ருத :—ப்ரு. உப. 3.7.4-24).

820. ஸதீ தேவீ (தாக்ஷாயணீ.)

821. பிரம்மசக்தியாயிருப்பவள். (ஒ. அணி-ரக்ஷாக்ர-கீலே-ஷ்யா-தணி: புச்சேsக்னி: ஸீமயோ :—ஆனந்த மயகோசஸ்த-புச்சப்ரஹ்ம ரூபா இத்யர்த்த: | 'ப்ரஹ்மண ஆணீஸ்த' இதி ச்ருதிச்ச'—பா.)

822. பிரம்மமாக இருப்பவள்.

823. அனைத்தையும் சிருஷ்டிப்பவள்.

824. அநேக ரூபமுள்ளவள்.

825. ஞானிகளால் அர்ச்சிக்கப்பட்டவள். (ஒ. சதுர்விதா பஜந்தே. மாம் ஜனா: ஸுக்ருதினோ sர்ஜுந|—கீதை. 7.16.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

826. ப்ரஸவித்ர்யை
827. ப்ரசண்டாயை
828. ஆஜ்ஞாயை
829. ப்ரதிஷ்டாயை
830. ப்ரகடாக்ருதயே
831. ப்ராணேச்வர்யை
832. ப்ராணதாத்ர்யை
833. பஞ்சாசத்-பீடரூபிண்யை
834. விச்ருங்கலாயை
835. விவிக்த-ஸ்தாயை
836. வீரமாத்ரே
837. வியத்-ப்ரஸூவே
838. முகுந்தாயை

---

826. எல்லாவற்றையும் படைத்தவள்.

827. கோபம் மிகுந்தவள். (ஒ. 'பீஷாஸ்மாத் வாதஃ பவதே'—தை. உப. 2.8.)

828. (வேதவடிவான) ஆஜ்ஞா ரூபிணீ. (ஜ்ஞாயை நமஃ பா.பே.)

829. பிரதிஷ்டையாக இருப்பவள்: (ஒ, 'ப்ரதிஷ்டா ஸர்வபூதானும் ப்ரஜ்ஞைஷா பரமேச்வரீ'—பிரம்ம கீதை.)

830. எல்லோருக்கும் விளங்கும் வடிவினள். (ஒ. 'த-மஹம்-ப்ரத்யய-வ்யாஜாத் ஸர்வே ஜானந்தி ஜந்தவ:| ததாபி சிவ ரூபேண ந விஜானந்தி மாயயா'—ஸூதஸம்ஹிதை. ப்ரகடயோகினீ வடிவினள்.)

831. பிராணன்களுக்கும் இந்திரியங்களுக்கும் ஈசுவரீ.

832. பிராண சக்தியையும் இந்திரிய சக்தியையும் கொடுப்பவள்.

833. ஐம்பது பீடங்களாக இருப்பவள். (ஐம்பது அக்ஷரங்கள், 'க்ஷ' வுடன் ஐம்பத்தொன்ருக ; அவையே சக்தி பீடங்கள். காம ரூபம் வாராணஸீ, நேபாலம், கேதாரம், உஜ்ஜயினீ, பிரயாகை, காம கோடி முதலிய ஐம்பத்தொரு க்ஷேத்ரங்கள் பாஹ்யமான தேவீ பீடங்கள்.)

834. தளை இல்லாதவள். (அரைஞாண் இல்லாதவள், ஒ. 'நக்னேதி வா| அலம்புராதி பீடேஷு தாத்ருச தேவீ மூர்த்தி தர்சனத்|')

835. தனிமையான இடத்திலிருப்பவள். (விவேகிகளின் உள்ளத்திலிருப்பவள்.)

836. வீரர்களுக்குத் தாய்.

837. ஆகாயத்தைப் படைத்தவள். (ஒ. 'ஆத்மன ஆகாசஃ ஸம்பூதஃ|'—தை. உப. 2. 1.)

838. முக்தியளிப்பவள். (முக்திந் ததாதீதி முகுந்தா அல்லது முகுந்தன் வடிவானவள். ஒ. 'கதாசிதாத்யா லலிதா பும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

839. முக்தி-நிலயாயை
840. மூல-விக்ரஹ-ரூபிண்யை
841. பாவஜ்ஞாயை
842. பவ-ரோகக்ன்யை
843. பவ-சக்ர-ப்ரவர்த்தின்யை
844. சந்த: ஸாராயை
845. சாஸ்த்ர-ஸாராயை
846. மந்த்ர-ஸாராயை
847. தலோதர்யை
848. உதார-கீர்த்தயே

ரூபா க்ருஷ்ண விக்ரஹா। ஸ்வ-வம்ச-வாதனுரம்பா-தகரோத்-விவசம் ஜகத் ॥ தத: ஸ கோபீ ஸம்ஜ்ஞாபி-ராவ்ருதோऽபூத் ஸ்வ-சக்திபி:। ததா தேந விநோதாய ஸ்வம் ஷோடா ऽகல்பயத்-வபு:॥'—தந்த்ர ராஜம்.)

839. முக்திக் கிருப்பிடமானவள்.

840. மூலவிக்ரஹ ரூபிணீ. (ராஜராஜேசுவரீ எல்லா சக்திகளுக்கும் பிறப்பிடம்).

841. மனதிலுள்ள எண்ணத்தையும் நோக்கத்தையும் ப்ரீதியையும் அறிபவள்.

842. பிறவிப்பிணியைத் தீர்ப்பவள்.

843. ஸம்ஸார சக்கரத்தைச் சுழலச் செய்பவள். (ஒ. 'ஏஷா ஸர்வாணி பூதானி பஞ்சபிர்-வ்யாப்ய மூர்த்திபி:। ஜன்ம-வ்ருத்தி-க்ஷயைர்-நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத்॥'—மனுஸ்மிருதி. சக்ரமும் மனமே யாம்.)

844. வேதஸாரமானவள். (ஸகல சாஸ்திரங்களிலும் ஸாரமானது மூன்று வேதம். அதின் ஸாரம் காயத்ரீ. அதற்கு ரூபம் இரண்டு; ஒன்று இருபத்து நான்கு அக்ஷரங்களுடையது, மற்றது பதினைந்து அக்ஷரங்களுடையதும் அதிரகசியமானதும். அல்லது மனதின் ருசியை அனுசரித்துச் செய்யப்படும் உபாஸனை. ஒ. 'யத்ர யத்ர மனஸ்-துஷ்டிர்-மனஸ்-தத்ரைவ தாரயேத் ।தத்ர தத்ர பரானந்த-ஸ்வரூபம் ஸம்ப்ரகாசதே ॥ உபாஸக-தௌரேயஸ்ய யத்ரேச்சா ஸ ஏவ தர்ம:। யத்ர நேச்சா ஸ ஏவாதர்ம:॥ ஈத்ருசம் ஸ்வைராசரணம் ஸாரம் ந்யாய்யம் யஸ்யா இத்யர்த்த:'—பா)

845. சாஸ்திர ஸாரமானவள். (சாஸ்திரம் என்றால் வேத பரமாய் வேதத்தைப் பின்பற்றிய தர்சனம்.)

846. மந்திர ஸாரமானவள்.

847. (கைத்தலம் போல் ஸமமான) சிறிய இடையுள்ளவள்.

848. பரந்ததும் உயர்ந்ததுமான கீர்த்தி வாய்ந்தவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

849. உத்தாம-வைபவாயை
850. வர்ண-ரூபிண்யை
851. ஜன்ம-ம்ருத்யு-ஜரா-தப்த-ஜன-விச்ராந்தி-தாயின்யை
852. ஸர்வோபநிஷ-துத்குஷ்டாயை
853. சாந்த்யதீத-கலாத்மிகாயை
854. கம்பீராயை
855. ககநாந்தஸ்தாயை
856. கர்விதாயை
857. கானலோலுபாயை
858. கல்பனா-ரஹிதாயை
859. காஷ்டாயை
860. அகாந்தாயை
861. காந்தார்த்த-விக்ரஹாயை
862. கார்ய-காரண-நிர்முக்தாயை
863. காம-கேலீ-தரங்கிதாயை
864. கனத்-கனக-தாடங்காயை

---

849. அளவிடமுடியாத பெருமையுள்ளவள்.
850. எழுத்து ரூபமானவள்.
851. பிறப்பு இறப்பு மூப்புத் துன்பங்களில் தவிக்கும் ஜனங்களுக்கு உத்தமமான மோக்ஷ சுகமாகிய சாந்தியளிப்பவள்.
852. எல்லா உபநிஷத்துக்களிலும் உத்கர்ஷமாய் உறக்கக் கூறப்பட்டவள்.
853. சாந்திக்கும் உயர்ந்த கலை வடிவினள். (ஒ. 'சாந்த்-யதீத-கலாத்வைத-நிர்வாணனந்த-போத-தா.')
854. ஆழங்காண முடியாதவள்.
855. ஆகாசத்திடையிருப்பவள். (பூதாகாசம், தஹராகாசம், பராகாசம் மூன்றிலும் இருப்பவள்.)
856. கர்வமுள்ளவள். (உலகனைத்துமாயிருக்கும் 'பராஹந்தா'. ஒ. 'அஹங்-க்ரது-ரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹ-மஹமௌஷதம்'— கீதை 9.16.)
857. ஸங்கீதத்தில் பிரியமுள்ளவள்.
858. கற்பனைகள் இல்லாதவள்.
859. முடிவான எல்லை நிலமாக இருப்பவள். (ஒ. ஸா காஷ்டா ஸா பராகதி:—கட. உப. 3. 11.)
860. பாவத்தைப் போக்குபவள். (ஒ. 'அகம் பாபே ச து:க்கே ச')
861. காந்தனாகிய பரமசிவனின் பாதி உடல் கொண்டவள்.
862. (சுத்த சைதன்ய வடிவில்) காரியகாரணங்களுக்கு அப்பாற்பட்டவள்.
863. காமேசுவரனுடைய லீலைகளாகிய அலைகள் தோன்றுங் கடல்.
864. பிரகாசமான ஸ்வர்ண தாடங்கமணிந்தவள். (ஒ. ஸுதாமப்யாஸ்வாத்ய....தவ ஜநநி தாடங்க-மஹிமா. ஸௌ. லஹரீ 28.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

865. லீலா-விக்ரஹ-தாரிண்யை
866. அஜாயை
867. க்ஷய-விநிர்முக்தாயை
886. முக்தாயை
869. க்ஷிப்ர-ப்ரஸாதின்யை
870. அந்தர்முக-ஸமராத்யாயை
871. பஹிர்முக-ஸுதுர்லபாயை
872. த்ரய்யை
873. த்ரிவர்க்க-நிலயாயை
874. த்ரிஸ்தாயை
875. த்ரிபுரமாலின்யை
876. நிராமயாயை
877. நிராலம்பாயை

---

865. விளையாட்டாகப் பல உருவங்களைத் தரிப்பவள்.

866. பிறப்பில்லாதவள்.

867. மரணமில்லாதவள்.

868. ஸௌந்தர்யம் படைத்தவள். (ஒ. 'முக்தः ஸுந்தர முடயோः')

869. விரைவில் அருள் புரிபவள்.

870. உள் நாட்டத்தால் நன்கு ஆராதிக்கத்தக்கவள்.

871. வெளி நாட்டத்தால் அடைதற்கரியவள். (ஒ. தரள-கரணனும் அஸுலபா—ஸௌ. லஹரீ. 95. ஒ. பராசः காமானனுயந்தி பாலாः—கட. உப. 4. 2.)

872. மூன்று வேத வடிவானவள். (ரிக்வேதம் 'அக்னிமீடே' என்று ஆரம்பிக்கிறது. யஜுர் வேதம் 'இஷேத்வா' என்று ஆரம்பிக்கிறது. ஸாம வேதம் 'அக்ன ஆயாஹி' என்று ஆரம்பிக்கிறது அ-இ-அ என்ற இவ்வெழுத்துக்களின் ஸந்தியால் வாக்பவ பீஜம் உண்டாகிறது.)

873. அறம் பொருள் இன்பம் என்ற த்ரிவர்க்கத்தில் நிலைபெற்றவள்.

874. மூன்றில் இருப்பவள். (ஒ. 'த்ரயோ லோகாஸ்-த்ரயோ தேவாஸ்-த்ரைவித்யம் பாவக-த்ரயம் | த்ரீணி ஜ்யோதீம்ஷி வர்க்காச்ச த்ரயோ தர்மாதயஸ்-ததா|த்ரயோ குணாஸ்-த்ரயःசப்தாஸ் த்ரயோ தோஷாஸ்-ததாச்ரமா:| த்ரயः காலாஸ்-ததாவஸ்தாः பிதரோ ஽ஹர்-நிசாதயः| மாத்ரா த்ரயஞ் ச தே ரூபம் த்ரிஸ்தே தேவி ஸரஸ்வதி || '—மார்க்கண்டேயபுராணம்.)

875. திரிபுரமாலினீ வடிவினள். (ஸ்ரீசக்ரத்தில் ஆறுவது ஆவரணத்தின் தேவதை.)

876. நோயற்றவள். (அன்னையை நினைத்தவர்க்கு எல்லா நோய்களும் நீங்கும்.)

877. வேறு பிடிப்பு வேண்டாதவள். (ஒ. 'பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.'—குறள்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

878. ஸ்வாத்மா-ராமாயை
879. ஸுதா-ஸ்ருத்யை
880. ஸம்ஸார-பங்க-நிர்மக்ன-ஸமுத்தரண-பண்டிதாயை
881. யஜ்ஞ-ப்ரியாயை
882. யஜ்ஞ-கர்த்ர்யை
883. யஜமான-ஸ்வரூபிண்யை
884. தர்மதாராயை
885. தனாத்யக்ஷாயை
886. தன-தான்ய-விவர்த்தின்யை
887. விப்ர-ப்ரியாயை
888. விப்ர-ரூபாயை
889. விச்வ-ப்ரமண-காரிண்யை
890. விச்வக்ராஸாயை

---

878. தன்னிடத்திலேயே ரமிப்பவள். (ஒ. 'ஸஹ்யேதாவானாஸ யதா ஸ்த்ரீபுமாம்ஸௌ ஸம்பரிஷ்வக்தௌ ஸ இமமேவாத்மானம் த்வேதா பாதயத் தத: பதிச்ச பத்னீசாபவதாம்'—ப்ரு. உப. 1. 4. 3. உலகாகிய நந்தவனத்தை மனத்திலேயே உடையவள்.)

879. அமிருத தாரையாக இருப்பவள். (ஸஹஸ்ராரத்திலிருந்து பெருகுவது. ஒ. 'ஸுதாஸாராபிவர்ஷிணீ'—106 வது நாமம்.)

880. ஸம்ஸாரச் சேற்றில் புதைந்தவரைத் தூக்கிவிடுவதில் திறமை வாய்ந்தவள். (ஒ. தேஷாமஹம் ஸமுத்தர்த்தா—கீதை. 12. 7.)

881. யஜ்ஞத்தை விரும்புபவள்.

882. யஜ்ஞத்தைச் செய்பவள். (யஜமான பத்னீ வடிவினள்.)

883. யஜமான வடிவினள். (ஒ. யஞ்ஞோ யஜ்ஞபதிர்-யஜ்வா யஜ்ஞாங்கோ யஜ்ஞவாஹன:—விஷ்ணு ஸஹஸ்ர நாமம். சுலோ. 103.)

884. தர்மத்திற்கு ஆதாரமாயிருப்பவள்.

885. செல்வத்திற்கு அதிதேவதை.

886. தனத்தையும் தானியத்தையும் விருத்தி செய்பவள்.

887. விப்ரரிடம் பிரியமுள்ளவள். (ஒ. 'ஜன்மனா ப்ராஹ்மணோ ஜ்ஞேய: ஸம்ஸ்காரைர்-த்விஜ உச்யதே। வித்யயா யாதி விப்ரத்வம் த்ரிபி: ச்ரோத்ரிய உச்யதே.')

888. விப்ரவடிவினள். (அ. 'அதவா விப்ரான் ரூபயதி பூர்வ-ரூபவத: கரோதி.' தேவியின் ஆராதனையால் ஓஜஸ்ஸும் தேஜஸ்ஸும் வளர்ந்து விப்ரனிடம் ஏற்படும் சக்திக் குறைவைப் பூர்த்தி செய்து அவனைத் தகுதியுடையவனாய்ச் செய்கிறது.)

889. உலகைச் சுற்றிவரச் செய்பவள். (ஒ. 'ப்ராமயன் ஸர்வ பூதானி யந்த்ராரூடானி மாயயா'—கீதை 18. 61.)

890. உலகை ஒரு கவளமாய் உண்பவள். (ஒ. யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதன:। கட. உப. 2. 25.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

891. வித்ருமாபாயை
892. வைஷ்ணவ்யை
893. விஷ்ணுரூபிண்யை
894. அயோன்யை
895. யோநி-நிலயாயை
896. கூடஸ்தாயை
897. குலரூபிண்யை
898. வீரகோஷ்டீ-ப்ரியாயை
899. வீராயை

---

891. பவழம் போன்ற காந்தியுள்ளவள்.

892. விஷ்ணு சக்தியாக இருப்பவள்.

893. விஷ்ணுவாகவே இருப்பவள். (ஒ. ஆத்யா சக்திர்-மஹேசஸ்ய சதுர்த்தா-பின்ன-விக்ரஹா| போகே பவானி ரூபா ஸா துர்க்கா ரூபா ச ஸங்கரே || கோபே ச காலிகா ரூபா பும் ரூபா ச மதாத்மிகா || — லலிதோபாக்கியானத்தில் விஷ்ணு வசனம். ஒ. 'ஸஹஸ்ர-மூர்த்தான-மனந்த-சக்திம் ஸஹஸ்ர-பாஹும் புருஷம் புராணம்| சயான-மப்தௌ லலிதே தவைவ நாராயணாக்யம் ப்ரணதோ஽ஸ்மி ரூபம் |—கூர்ம புராணத்தில் ஹிமவான் வசனம். ஒ. 'துர்க்காம் காத்யாயனீஞ் சைவ யஜன் வாக்தேவதாமபி | சேதஸா ஸுப்ரஸன்னேன விஷ்ணுலோக - மவாப்னுயாத்'— ப்ருஹத் பராசர ஸ்மிருதி.)

894. பிறப்பிடம் (காரணம்) இல்லாதவள் (பிறப்பில்லாததால்).

895. (அனைத்துலகிற்கும் உலகைப் படைப்பவர்க்கும்) காரணமாயும் உற்பத்தி ஸ்தானமாயு மிருப்பவள். ஒ. யோனிச்ச ஹி கீயதே. பிரம்ம ஸூத்ரம். 1. 4. 27.)

896. கூடம்போல் அசையாதிருப்பவள். ஜீவ சைதன்யத்திற்கு அதிஷ்டமான கூடஸ்தசைதன்யமாய் இருப்பவள் அல்லது வாக்பவ கூடத்திலிருப்பவள். ஒ. 'கூடஸ்த-மசலந் த்ருவம்'— கீதை 12. 4. 'கூடஸ்தோ அக்ஷர உச்யதே'—கீதை 15. 16. ஒ. 'கூடம் யந்த்ரே ஽ந்ருதே ராசௌ நிச்சலே லோஹ முத்கரே| மாயா ஽த்ரி-ச்ருங்கயோஸ்-துச்சே ஸீராவயவ-தம்பயோ: || புரத்வாரே ச சம்ஸந்தி'—விச்வ: ||)

897. குலரூபிணீ. (வம்சம், பாஹிய பூஜை, மூலாதாரம், கௌல மார்க்கம் முதலியவற்றிலிருப்பவள்.)

898. (ஞான) வீரர்களின் கோஷ்டியை விரும்புபவள்.

899. வீரிய முள்ளவள், (வீரனான பதியையும் புத்திரனையும் உடையவள் 'வீரா'.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

900. நைஷ்கர்ம்யாயை
901. நாத-ரூபிண்யை
902. விஜ்ஞான-கலனாயை
903. கல்யாயை
904. விதக்தாயை
905. பைந்தவாஸனாயை
906. தத்வாதிகாயை
907. தத்வமய்யை
908. தத்வமர்த்த-ஸ்வரூபிண்யை
909. ஸாமகான-ப்ரியாயை
910. ஸோம்யாயை

---

900. கர்மத் தொடர்பற்றவள். (ஒ. யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யா-தாகாசம் நோபலிப்யதே | கீதை 13. 32.)
901. நாதரூபிணீ. (பிரணவத்தின் அந்தத்திலுள்ளது நாதம். ஒ. ஆனந்த-லக்ஷண-மநாஹத நாம்நி தேசே நாதாத்மனா பரிணதம் தவரூப-மீசே | ப்ரத்யங்-முகேன மனஸா பரிசீயமானம் சம்ஸந்தி நேத்ர-ஸலிலை: புலகைச்ச தன்யா:' ||—அம்பாஸ்துதி. 19.—காளிதாஸன்.)
902. விஜ்ஞானத்தை உண்டாக்குபவள். (ஒ. 'சதுர்தசானாம் வித்யானாம் தாரணம் ஹி யதார்த்தத: | விஜ்ஞான-மிதி தத்வித்யாத்'.)
903. கலைகளில் திறமை வாய்ந்தவள்.
904. சாதுரியமுடையவள்.
905. பிந்துவாகிய ஆஸனத்திலிருப்பவள். (ஆஜ்ஞைக்குமேல் உள்ள பிந்து அல்லது ஸஹஸ்ரார மத்திய பிந்து அல்லது ஹம்ஸ ரூபமான பிந்து வ்யூஹம். ஒ. 'பிந்து வ்யூஹம் ப்ரவக்ஷ்யாமி பீஜ ரூபம் வரானனே| ஹகாரம் பிந்து ரூபேண ப்ரஹ்மாணம் வித்தி பார்வதி|| ஸகாரம் பிந்து ஸர்க்காப்யாம் ஹரிச்சாஹம் ஸுரேச்வரி| அவிநா-பாவ ஸம்பந்தௌ லோகே ஹரிஹராவிதி| —ஏவம் பிந்து த்ரயைர் யோகாத் த்ரிபுராநாம ரூபிணீ ||' ஞானார்ணவ தந்த்ரம்.)
906. முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட இயல்பான வடிவுடையவள். (ஒ. 'யுஷ்ம-தஸ்மத்-ப்ரத்யயாதீதம்.' பிரளய காலம் வரை இருந்து போகம் தருவது தத்வம். 'ஆப்ரலயம் யத்திஷ்டதி ஸர்வேஷாம் போகதாயி பூதானாம் | தத்-தத்வமிதி ப்ரோக்தம் ந சரீர கடாதி தத் || ')
907. தத்வரூபமானவள். (ஸத்-ஆத்ம தத்வம், சித்-வித்யா தத்வம், ஆனந்த-சிவதத்வம் என்ற மூன்று தத்வ வடிவானவள்.)
908. 'தத்'-'த்வம்' என்ற பரமாத்ம—ஜீவாத்ம ஐக்ய வடிவானவள்.
909. ஸாம கானத்தில் பிரியமுள்ளவள்.
910. சந்திரனைப்போல் அழகியவள். (உள்ளம் குளிர்ந்தவள். 'ஸௌம்யா' என்றும் பாடம்.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

911. ஸதாசிவ-குடும்பின்யை
912. ஸவ்யாபஸவ்ய-மார்க்க ஸ்தாயை
913. ஸர்வாபத்-விநிவாரிண்யை
914. ஸ்வஸ்தாயை
915. ஸ்வபாவ-மதுராயை
916. தீராயை
917. தீர-ஸமர்ச்சிதாயை
918. சைதன்யார்க்ய-ஸமா ராத்யாயை
919. சைதன்யகுஸும-ப்ரியாயை

---

911. ஸதாசிவ பத்னீ.

912. ஸவ்ய-அபஸவ்ய-மார்க்கங்களில் இருப்பவள். (ஸவ்யம் ஸ்ருஷ்டி, அபஸவ்யம் லயம், மார்க்கம் ஸ்திதி; ஸவ்யம் உத்தரம், அபஸவ்யம் தக்ஷிணம், மார்க்கம் மத்யமம்; ஸவ்யம் இடை, அபஸவ்யம் பிங்கலை, மார்க்கம் ஸுஷும்னை; அல்லது ஸவ்ய மார்க்கம் என்ற வைதிக உபாஸனை, அபஸவ்யம் என்ற வாமாசார தந்த்ர உபாஸனை எனவும் பொருள் கொள்ளலாம்.)

913. எல்லா ஆபத்துக்களையும் நீக்குபவள். (ஒ. சரணம் த்வாம் ப்ரபத்யந்தே யே தேவி பரமேச்வரி | நதே ஷாமாபத: காச்சிஜ் ஜாயந்தே க்வாபி ஸங்கட: || வராஹ புராணம்.)

914. (ஸ்வஸ்தமாக) தன்னிடமே நிலை பெற்றிருப்பவள். (இரண்டாவதின்றே துன்பமும் பயமும் வருவதால் தன்னிடமே நிலைத்திருத்தல் துன்பமற்ற நிலை. அதனுல் தான் நோயற்ற நிலையை 'ஸ்வஸ்தம்' எனக் கூறுகிறோம். ஒ. 'ஸ பகவ: கஸ்மின் ப்ரதிஷ்ட்டித இதி ஸ்வே மஹிம்னி யதி வா ந மஹிம்னீதி' சா. உப. 7. 23. 1.)

915. இயற்கையாகவே மதுரமாயிருப்பவள். (அல்லது மதுரையில் ஆலயங் கொண்டு விளங்கும் மீனாக்ஷி வடிவினள்.)

916. புத்திவன்மை வாய்ந்தவள். (அல்லது புத்தி வன்மையை அருள்பவள். ஒ. 'தியம் ராதி ததாதி இதி தீர.')

917. தீரர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவள்.

918. (விசேஷ அர்க்கியம் எனும்) சைதன்ய அர்க்கியத்தால் நன்கு ஆராதிக்கத் தக்கவள். (ஒ. 'ஜ்ஞானமர்க்யம்.'—பாவனோபநிஷத்து.)

919. சைதன்யமாகிற புஷ்பத்தை விரும்புபவள். (ஒ. 'ஜடானும் சைதன்ய-ஸ்தபக-மகரந்த-ஸ்ருதி ஜரீ'—ஸௌ. லஹரீ. 3. ஒ. 'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், இந்த்ரியாணாஞ்ச நிக்ரஹ: |

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

920. ஸதோதிதாயை
921. ஸதா-துஷ்டாயை
922. தருணாதித்ய-பாடலாயை
923. தக்ஷிணா-தக்ஷிணாராத்யாயை
924. தரஸ்மேர-முகாம்புஜாயை
925. கௌலிநீ-கேவலாயை
926. அனர்க்ய-கைவல்யபத-தாயின்யை
927. ஸ்தோத்ர-ப்ரியாயை

க்ஷாந்தி: புஷ்பந் தயா புஷ்பம் ஜ்ஞாந-புஷ்பம் பரம் மதம் || தப: புஷ்பம் ஸத்ய-புஷ்பம் பாவ-புஷ்ப-மதாஷ்டமம்.' 'ஸத்' அரும்பு: 'சித்' புஷ்பம், 'ஆனந்தம்' கனி.)

920. (ஒரு பொழுதும் அஸ்தமிக்காமல்) எப்போதும் உதயமாகியிருப்பவள். (ஒ. 'உதுத்யம் ஜாத வேதஸம்.' ஒ. 'ந வை தத்ர ந நிம்லோச நோதியாய கதாசன'—சா உப. 3. 11. 2. அல்லது நல்லவர்களிடம் எப்பொழுதும் பிரகாசிப்பவள்.)

921. எப்போதும் ஸந்தோஷமாயிருப்பவள். (அல்லது நல்லவர்களிடம் ஸந்தோஷமாயிருப்பவள்.)

922. யௌவன ஸூரியனைப் போன்று சிறிதே சிவந்த வெண்மை நிறத்துடன் பிரகாசிப்பவள். (உபாசனைக்குத் தகுந்தபடி மூர்த்தி பேதமும் வர்ண பேதமும்.)

923. பண்டிதர்களாலும் பாமரர்களாலும் ஆராதிக்கப்பட்டவள். (வைதிக மார்க்கத்தாலும் அவைதிக மார்க்கத்தாலும்; அல்லது கர்ம மார்க்கத்தாலும் ஞான மார்க்கத்தாலும். ஒ. 'வித்யயா ததாரோஹந்தி யத்ர காமா: பராகதா: | ந தத்ர தக்ஷிணாயந்தி நாவித்வாம்ஸஸ்-தபஸ்வின: ||' ஒ. 'ப்ரஜாகாமா தக்ஷிணம் ப்ரதிபத்யந்தே'—ப்ரச்ன உப. 1. 9.)

924. தாமரைப்பூ மலர்ந்தாற் போன்ற புன்சிரிப்பு முகமுடையவள். (அல்லது பய காலத்திலும்—பிரளய காலத்திலுங்கூட—புன்சிரிப்புடையவள். ஒ. தரே பயகாலேऽபி ஸ்மரமேவ முகாம்புஜம் யஸ்யா இதி வா ||)

925. கௌல தர்மமும் கேவல ஞானதர்மமும் இசையப் பெற்றவள்.

926. அளவற்ற மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருள்பவள்.

927. ஸ்தோத்திரத்தில் பிரியமுள்ளவள். (ஒ. 'ஸ்தோத்ரம் லௌகிகோ குணானுவாத: ஷட்வித: | நமஸ்காரஸ்-ததாசீச்ச ஸித்தாந்தோக்தி: பராக்ரம: | விபூதி: ப்ரார்த்தனா சேதி ஷட்-விதம் ஸ்தோத்ர-லக்ஷணம் ||')

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

928. ஸ்துதி-மத்யை
929. ச்ருதி-ஸம்ஸ்துத-வைபவாயை
930. மனஸ்வின்யை
931. மானவத்யை
932. மஹேச்யை
933. மங்களாக்ருதயே
934. விச்வமாத்ரே
935. ஜகத்தாத்ர்யை
936. விசாலாக்ஷ்யை
937. விராகின்யை
938. ப்ரகல்பாயை
939. பரமோதாராயை
940. பராமோதாயை
941. மனோமய்யை
942. வ்யோம-கேச்யை
943. விமானஸ்தாயை

---

928. துதிப்பவர்க்கு அறிவையும் ஐசுவரியத்தையும் அருள்பவள். (ஒ. 'ஸ்துத்யா மதிச்ச ஈச்ச யஸ்யா இதி வா | யத் ஸ்துத்யா ஜ்ஞானைச்வர்யே லப்யேதே ஸேதி யாவத்')

929. வேதம் போற்றும் வைபவமுடையவள். (ச்ருதிபி: ஸம்யக் ஸ்துதம் பரிசிதம் வைபவம் விபுத்வம் யஸ்யா: |'—பா.)

930. ஸ்வதந்திரமான மனதை யுடையவள்.

931. பெருந்தன்மை யுடையவள்.

932. மஹேசுவரீ.

933. மங்கள வடிவுடையவள்.

934. உலகீன்ற அன்னை.

935. உலகைத் தாங்குபவள்.

936. விசாலமான கண்ணுடையவள். (காசியில் விசாலாக்ஷி மூர்த்தி, நேபாளம் தேவியின் நேத்ரஸ்தானமாகக் கூறப்பட்டிருப்பதால். 'விசாலா' எனும் ஹிமாலய நேபாளப் பிரதேசத்தைக் கண்ணாக உடையவள் எனவும் பொருள் கொள்ளலாம்.)

937. வைராக்கிய சீலம் பொருந்தியவள்.

938. துணிச்சல் நிறைந்தவள்.

939. சிறந்த கொடையாளி.

940. பரம ஆனந்தத்தை உடையவள்.

941. மனோமயமானவள்.

942. வியோமகேசரான சிவ பத்னீ. (விராட் ரூபிக்கு ஆகாசமே கேசம்.)

943. விமானத்திலிருப்பவள். (அளவு கடந்த நிலையிலிருப்பவள். ஒ. 'விகதம் மானம் பரிமாணம் யஸ்ய ததபரிச்சின்னம் ப்ரஹ்ம தந்நிஷ்டா வா.'—பா.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

944. வஜ்ரிண்யை
945. வாமகேச்வர்யை
946. பஞ்சயஜ்ஞ-ப்ரியாயை
947. பஞ்சப்ரேத-மஞ்சாதி-சாயின்யை
948. பஞ்சம்யை
949. பஞ்ச-பூதேச்யை
950. பஞ்ச-ஸங்க்யோபசாரிண்யை
951. சாச்வத்யை
952. சாச்வதைச்வர்யாயை
953. சர்மதாயை
954. சம்பு-மோஹின்யை
955. தராயை

---

944. இந்திராணி வடிவினள். (ஒ. 'வஜ்ரிண இந்த்ரஸ்ய ஸ்த்ரீ சசி ரூபா'

945. வாமகர்களின் ஈசுவரீ. (ஒ. வாமா வாமமார்க்க-ரதாஸ்-த ஏவ பஞ்ச-யஜ்ஞவிலோபகத்வாத் குத்ஸிதா இதி வாமகா:')

946. பஞ்ச மஹா யஜ்ஞத்தில் பிரியமுள்ளவள். (சுருதியில் கூறிய ஐந்து யஜ்ஞங்கள் அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், சாதுர் மாஸ்யம், பசுபந்தம், ஸோமயாகம். ஸ்மிருதியில் கூறியவை தேவ-பித்ரு-மனுஷ்ய-பூத-வேத யஜ்ஞங்கள். பாஞ்சராத்ர ஆகமத்தில் கூறியவை அபிகமனம்-உபாதானம்-இஜ்யா-ஸ்வாத் யாயம்-யோகம். அல்லது உபநிஷத்தில் கூறிய த்யு-பர்ஜன்ய-ப்ருத்வீ-புருஷ-யோஷித் ரூப குண்டங்களில் ச்ரத்தா-ஸோம-வ்ருஷ்டி-அன்ன-ரேதஸ் ரூபமான ஆஹுதிகளால் செய்யப்படும் யஜ்ஞம்.)

947. ஐந்து ப்ரேத வடிவமான மஞ்சத்தில் வீற்றிருப்பவள். (ஒ. கதாஸ்-தே மஞ்சத்வம்—ஸௌ. லஹரீ. 92,)

948. பஞ்சப்ரம்மத்தில் ஐந்தாவதான ஸதாசிவ பத்னீ. (ஒ. 'த்ரிஷு ருத்ரோ வரிஷ்ட: ஸ்யாத் தேஷு மாயீ பர: சிவ: । மாயா விசிஷ்டாத் ஸர்வஜ்ஞாத் ஸாம்ப: ஸத்யாதி லக்ஷண:। ஸதாசிவோ வரிஷ்ட: ஸ்யாந்-நாத்ர கார்யா விசாரணா ॥'—ஸூத கீதை.)

949. பஞ்ச மஹா பூதங்களின் அதீசுவரீ.

950. ஐந்து வகை உபசாரத்துடன் பூஜிக்கத்தக்கவள். (கந்தம்-புஷ்பம்-தூபம்-தீபம்-நைவேத்யம் என்ற ஐந்து உபசாரங்கள்.)

951. எப்போதும் இருப்பவள்.

952. அழியாத ஐசுவரியமுடையவள்.

953. இன்பமளிப்பவள்.

954. சிவனை மோஹிக்கச் செய்தவள்.

955. பூதேவி வடிவானவள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

956. தரஸூதாயை
957. தன்யாயை
958. தர்மிண்யை
959. தர்ம-வர்த்தின்யை
960. லோகாதீதாயை
961. குணாதீதாயை
962. ஸர்வாதீதாயை
963. சமாத்மிகாயை
964. பந்தூக-குஸும-ப்ரக்யாயை
965. பாலாயை

---

956. பர்வதகுமாரி.

957. ஸகல ஸம்பத்தும் நிறைந்தவள். (யோகிகளுக்கு 'தன்யா' என்னும் மனவடக்கத்தால் மகிழ்ச்சி பொங்கும் நிலையை அருள் பவள். ஒ. வேண்டாமையன்ன விழுச் செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்பதில்—குறள் 362. பிராணப் பிரயாண ஸமயத்தில் ஏற்படும் "தன்யா" எனும் தியான யோகமாக இருப்பவள். பவிஷ்யோத்தர புராணத்தில் மரண கால நினைவு நான்கு விதமாய் வகுத்துக் கூறப்படுகிறது. (1) ஆர்த்தம், போகங்களில் அளவு கடந்த ஆசையும் உலகை விட்டுப்பிரிய மனமின்றி வருந்துதலும்; இதனால் தாழ்ந்த பிறவி. (2) ரௌத்ரம், உடலழியுமென்று நினைத்து வருந்தாமல் இருத்தல்; இதனால் உயர்ந்த மனிதப் பிறவி. (3) தன்யா என்பது தெளிவு, தயை, அடக்கம் இவற்றுடன் கூடியது; இதனால் தேவஜன்மம். ஒ. ஸூத்ரார்த்த-மார்க்கண மஹாவ்ரத-பாவனாநிர்ப்பந்த-மோக்ஷ கமனைகதி-ஹேது-சிந்தா|. பஞ்சேந்த்ரியாத்யுப-சமச்ச தயா ச பூதே த்யானந் து தன்யமிதி தத் ப்ரவதந்தி ஸந்த: || (4) சுக்லம் என்பது தத்துவ நிஷ்டை. இதனால் பிறப்பின்மை.)

958. தர்மத்தில் மனங் கொண்டவள்.

959. தருமத்தை வளர்ப்பவள். (ஒ. ஜிதேந்த்ரியத்வம் சௌசஞ்ச மாங்கல்யம் பக்திரேவ ச| சங்கரே பாஸ்கரே தேவ்யாம் தர்மோऽயம் மானுஷ: ஸ்ம்ருத:| த்யாத: ஸாம்ப இமான் தர்மான் வ்ருத்திம் நயதி தேஹினாம்||—வாமன புராணம்.)

960. உலகங்களைக் கடந்தவள்.

961. குணங்களைக் கடந்தவள்.

962. எல்லாவற்றையுங் கடந்தவள்.

963. சாந்த ஸ்வரூபிணீ. (ஒ. 'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ-மத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே'—மா. உப. 7.)

964. பந்தூக புஷ்பம் போன்ற காந்தியுடையவள்.

965. பாலாம்பிகை வடிவினள். (கன்யாகுமரி பாலா தேவி.)

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

966. லீலா-விநோதின்யை
967. ஸுமங்கல்யை
968. ஸுக-கர்யை
969. ஸுவேஷாட்யாயை
970. ஸுவாஸின்யை
971. ஸுவாஸின்யர்ச்சன-ப்ரீதாயை
972. ஆசோபனாயை
973. சுத்த-மானஸாயை
974. பிந்து-தர்ப்பண-ஸந்துஷ்டாயை
975 பூர்வஜாயை
976. த்ரிபுராம்பிகாயை
977. தசமுத்ரா-ஸமாராத்யாயை

---

966. (பிரபஞ்ச) லீலையில் ரமிப்பவள்.

967. ஸுமங்கலி வடிவினள். அல்லது பிரம்ம வித்யா வடிவினள். (ஒ. அசுபானி நிராசஷ்டே தனோதி சுப ஸந்ததிம் | ச்ருதி மாத்ரேண யத் பும்ஸாம் ப்ரஹ்ம தன்-மங்களம் விது:||—விஷ்ணு புராணம்.)

968. சுகத்தை யருள்பவள்.

969. நன்கு அலங்கரிக்கப்பட்டவள்.

970. ஸுவாஸினீ வடிவினள். (சிறந்த ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற ஸுமங்கலி. பரமசிவன் எப்போதும் ஜீவித்திருப்பதால் தேவி என்றும் ஸுவாஸினியே.)

971. ஸுவாஸினீ பூஜையால் திருப்தியடைபவள். (அல்லது ஸுவாஸினிகள் செய்யும் அர்ச்சனையால் மகிழ்பவள்.)

972. பரிபூர்ணமான சோபையுள்ளவள்.

973. பரிசுத்தமான மனதுடையவள்.

974. பிந்து தர்ப்பணத்தால் மகிழ்ச்சியடைபவள். (ஆனந்தமயசக்ர பிந்துவில் பிராம்மணர் பாலாலும், க்ஷத்திரியர் நெய்யாலும், வைசியர் தேனாலும், ஏனையோர் மதுவாலும் செய்யுந் தர்ப்பணம்.)

